# சநாதன தர்மம்









ஆன்மீகர் செம்மல் ஞானசற்குரு
**சிவ செல்வராஜ்**

தங்க ஜோதி ஞான சபை அறக்கட்டளை
சமரச சுத்த சன்மார்க்க சத்திய சங்கம்
கன்னியாகுமரி.

# காணிக்கை

"ஆன்ம நேய ஒருமைப்பாடு"
பெற உலக மக்கள் அனைவருக்கும்
அன்புடன் காணிக்கையாக்குகிறேன்.



# சநாதன தர்மம்




ஆன்மீகச் செம்மல் - ஞானசற்குரு

**சிவ செல்வராஜ்**

தங்க ஜோதி ஞானசபை அறக்கட்டளை

சமரச சுத்த சன்மார்க்க சத்திய சங்கம்

17/49P, கலைஞர் குடியிருப்பு

கன்னியாகுமரி - 629 702

www.vallalyaar.com

Cell : 92451 53454

# பதிப்பு விபரம்


| | | |
|---|---|---|
| நூல் | : | சனாதன தர்மம் |
| ஆசிரியர் | : | சிவ செல்வராஜ் |
| பொருள் | : | ஆன்மீகம் |
| உரிமை | : | S.S. சுயம்ஜோதி<br>யார் வேண்டுமானாலும் வெளியிடலாம் |
| வெளியிடுவோர் | : | தங்கஜோதி ஞானசபை அறக்கட்டளை<br>சமரச சுத்த சன்மார்க்க சத்திய சங்கம்<br>17/49P, கலைஞர் குடியிருப்பு<br>கன்னியாகுமரி - 629 702 |
| முதல் பதிப்பு | : | வள்ளல் பெருமான் ஒளியாகி எங்கும் நிறைந்து<br>134 ஆண்டுகள் பிறந்த தின வெளியீடு 30-01-2007<br>2000 பிரதிகள் |
| இரண்டாம் பதிப்பு | : | 07-02-2012 தைப்பூசம் - 2000பிரதிகள் |
| மூன்றாம் பதிப்பு | : | 15-08-2013 இந்திய சுதந்திர தினம்<br>2000 பிரதிகள் |
| காணிக்கை | : | ரூ. 50 |
| அச்சிட்டோர் | : | நாஞ்சில் ஆப்செட் பிரிண்டர்ஸ்,<br>கோர்ட் ரோடு, நாகர்கோவில். Ph : 233853 |




சத்திய ஞானசபை, வடலூர்

அருட்பெருஞ்ஜோதி
தனிப்பெருங்கருணை

அருட்பெருஞ்ஜோதி
அருட்பெருஞ்ஜோதி

# சமரச சுத்த சன்மார்க்க சத்திய சங்கம்

## தங்கஜோதி ஞானசபை அறக்கட்டளை

17/49P, கலைஞர் குடியிருப்பு, கன்னியாகுமரி - 629 702

## பணிவுரை

ஆன்மநேய ஒருமைப்பாடுடையீர்,

வந்தனம், நன்றி, நலமே நிலவுக. எல்லாம் வல்லவரான, எங்கும் நிறைந்த இறைவன் திருவருளால், சற்குரு திருவருட்பிரகாச வள்ளலார் இராமலிங்க சுவாமிகள் அவர்கள் ஆசியால், அடியேனை ஆன்மீக பாதையில் நடையயில வைத்த கருணையின் திருஉருவம் ஜோதி இராமசாமி தேசிகர் அவர்கள் தூண்டுதலால், அடியேன் 21-03-1992 இல் முதன்முதலாக கண்மணி மாலை என்னும் ஞானவிளக்கம் கூறும் நூலை ஞானிகள் ஆசியுடன் வெளியிட்டேன்.

அருட்பெருஞ்ஜோதி ஆண்டவர் என் உள்ளிருந்து தூண்ட பற்பல கவிநூற்கள் ஆக்கினேன். இறைவனை சுட்டும் இனியபாக்களே என் கை எழுதியது! ஆன்மீக வழி காட்டும் அறிவுப் பாடல்களே! எனது பிரார்த்தனையும் கூடவே இணைந்தது.

இரண்டாவதாக 21-12-1995 அனுமன் ஜெயந்தியன்று தேரூர் குருமகாதேவ் இராமதாச பரமஹம்ஸர் அவர்கள் ஆசியால் அடியேன் எழுதிய விநாயகர் அனுமன் துதிகள் 108-ஐ இலவச புத்தகமாக மதுரை அன்பர் திரு. A. மகாலிங்கம் அவர்கள் வெளியிட்டார்கள்.

மூன்றாவதாக 23-01-1996 தோட்டியோடு ஸ்ரீ மௌன குரு சுவாமிகள் குருபூஜையன்று, குருவருளால் அடியேன் எழுதிய ஸ்ரீ மௌனகுரு சுவாமிகள் துதிகள் 108-ஐ இலவச புத்தகமாக இரணியல் அன்பர் திரு. K. திருநீலகண்டன் அவர்கள் வெளியிட்டார்கள்.

நான்காவதாக 28-07-1996 பிரதோஷத்தன்று மருந்துவாழ்மலை ஓம் உன் திருவருளடி ஆனந்த காளிதாசன் சுவாமிகள் அவர்கள் ஆசியால் அடியேன் எழுதிய ஸ்ரீ சுந்தரேஸ்வரர் துதிகள் 108-ஐ இலவச புத்தகமாக ஆரல்வாய்மொழி ஜோதி குரு ஞானசபை அன்பர் சிவத்திரு இராமசாமி நாடார் அவர்கள் வெளியிட்டார்கள்.

ஐந்தாவதாக 16-09-1996 விநாயகர் சதுர்த்தியன்று ஸ்ரீ அறுகம்புல் சித்தர் நடராஜ சுவாமிகள் அவர்கள் ஆசியால் அடியேன் எழுதிய ஸ்ரீ அறுகம்புல் சித்தி பால விநாயகர் துதிகள் 108-ஐ இலவசப் புத்தகமாக கோணம் ஸ்ரீ அறுகம்புல் சித்தர் தபோவன டிரஸ்ட்டார் வெளியிட்டார்கள்.

ஆறாவதாக 13-10-1996 நவராத்திரி முதல் நாளில் திருவருட் பிரகாச வள்ளலார் இராமலிங்க சுவாமிகள் அவர்களின் 174-ஆவது திருஅவதார தின நன்னாளில் என் குரு ஜோதி இராமசாமி தேசிகர் அவர்கள் ஆசியால் அடியேன் எழுதிய ஸ்ரீ ஆயுர்தேவி துதிகள் 108-ஐ இலவசப் புத்தகமாக வேம்பனூர் அன்பர் திரு. P.K. மாதவன் நாயர் அவர்கள் நினைவாக அவர்தம் மனைவி திருமதி. M. ஹைமாவதி தங்கச்சி அவர்கள் வெளியிட்டார்கள்.

ஏழாவதாக, 14-01-1997 பொங்கல் நாளில் அடியேன் எழுதிய தேரூர் குருமகாதேவ் இராமதாச பரமஹம்சர் போற்றி பாடல்கள், ஸ்ரீ அழகிய மணவாள விநாயகர் துதிகள் ஆக 108-ஐ இலவசப் புத்தகமாக பள்ளத்தூர் வாழும் உத்தம தம்பதிகள் திரு. S. தங்கமணி நாடார் திருமதி. S. தங்கப்பழம் நாடாச்சி ஆகியோர் வெளியிட்டார்கள்.

எட்டாவதாக 07-03-1997 மகா சிவராத்திரி திருநாளில் அடியேன் எழுதிய திருப்பன்னிபாகம் அருள்தரும் ஸ்ரீ ஆஞ்சநேய ஸ்வாமி துதிகள் 108-ஐ இலவசப் புத்தகமாக, எனது தந்தை ஜெயகுமாரி ஸ்டோர்ஸ் உரிமையாளர் திரு. K. சிவசுப்பிரமணியபிள்ளை அவர்களின் 80 வயது நிறைவைக் கொண்டாடும் விதமாக எனது மகன் S.S. சுயம்ஜோதி Pre. K.G. அவர்கள் வெளியிட்டார்கள்.

ஒன்பதாவதாக பேயோடு, அருள்மிகு ஸ்ரீ பத்திரகாளியம்மன் ஆலய அஷ்டபந்தன மஹா கும்பாபிஷேக திருநாளில் 15-06-1997-ல் பொருள் புரியும் பேயோடு ஸ்ரீ குருதவசி ஐயா பாமாலை 108-ஐ இலவச புத்தகமாக ஸ்ரீ குருதவசி ஐயா குடும்பத்தாராகிய பேயோடு ஊர் பொதுமக்கள் வெளியிட்டார்கள்.

பத்தாவது நூலாக, அடியேன் முதலில் வெளியிட்ட கண்மணிமாலை பல புதிய பகுதிகள் சேர்க்கப்பட்டு 10-09-2002 விநாயகர் சதுர்த்தியன்று கன்னியாகுமரி அருள்மிகு ஸ்ரீ பகவதி அம்மன் பொற்பாதங்களில் சமர்ப்பித்து வெளியிட்டோம்.

பதினொன்றாவது நூலாக, சற்குரு வள்ளலார் தூண்டுதலால் அடியேன் அருள்மணி மாலை என்னும் ஞானவிளக்க நூலை எழுதி 18-02-2004 மஹா சிவராத்திரியன்று கன்னியாகுமரி அருள்மிகு ஸ்ரீ பகவதி அம்மன் பொற்பாதங்களில் சமர்ப்பித்து வெளியிட்டோம்.

பன்னிரண்டாவது நூலாக அடியேனை காத்து இரட்சிக்கும் அகில உலக அன்னை, ஆதி சக்தி, கன்னிகா பரமேஸ்வரி, பாலா, வாலை, தாய், கன்னியாகுமரி அருள்மிகு ஸ்ரீ பகவதி அம்மனை வேண்டி பிரார்த்தித்து ஸ்ரீ பகவதி அந்தாதியை இயற்றி நாகர்கோவில் கெங்கா ஜூவெல்லர்ஸ் பேருதவியால் 23-06-2004 ஆனி-மகம் மாணிக்கவாசகர் குருபூஜையன்று அகிலாண்டகோடி பிரம்மாண்ட நாயகி, மகாமாயை கன்னியாகுமரி அருள்மிகு ஸ்ரீ பகவதி அம்மன் பொற்பாதங்களில் சமர்ப்பித்து வெளியிட்டோம்.

பதின்மூன்றாவது நூலாக, எல்லாம் வல்ல இறைவன் அருட்பெருஞ் ஜோதி ஆண்டவர் திறத்தைக்கூறி, அருள்புரியும் விதத்தை வெளிப்படுத்தி, அடியேன் உள்ளிருந்து சற்குரு வெளிப்படுத்தி அருளிய, ஒப்பற்ற அருட்பெருஞ்ஜோதி அந்தாதி என்னும் நூலை 25-01-2005 தைப்பூசத்தன்று திருவண்ணாமலை ஆகாஷ் ஹோட்டல்ஸ் உயர்திரு. S.R. முத்து கிருஷ்ணன் பேருதவியால் வடலூரில் தர்ம சாலையில் வெளியிடப்பட்டது.

பதினான்காவதாக சன்மார்க்க தெய்வம் எனும் நூலை நாகர்கோவில் ஜெயகுமாரி புத்தக நிலைய உரிமையாளர் S. அசோக்குமார், பகவான் ஸ்ரீ சத்திய சாயிபாபா 80-வது பிறந்த நாளான 23-11-2005-ல் வெளியிடுகிற புண்ணியம் பெற்றார்.

பதினைந்தாவது நூலாக "சற்குரு கோவிந்த சுவாமிகள்" 30-12-2005 ஸ்ரீ ஆஞ்சநேயர் ஜெயந்தி திருநாளில் ஆரல்வாய்மொழி இராமலிங்க சுவாமி நிலைய அன்பர் ஜோதி ஸ்ரீ N. கனக சபாபதி அவர்களால் வெளியிடப்பட்டது.

பதினாறாவது நூலாக அடியேன் ஏற்கனவே இலவசமாக வெளியிட்ட எட்டு நூற்களைத் தொகுத்து "அஷ்டமணி மாலை" என்று 06-04-2006-ல் அடியேனின் 50-வது பிறந்தநாளில் நட்சத்திரத்தில், 1992-ம் வருட முதலே எம்மை ஆதரித்துக் காத்தருளும் என் உயிர் சென்னை அன்பர்கள் ஜோதி ஸ்ரீ த. முருகேசன், ஜோதி ஸ்ரீ G. நாராயணா ஜோதி ஸ்ரீ G. கோபால கிருஷ்ணன் ஆகிய மும்மூர்த்திகளும் வெளியிட்டார்கள்.

பதினேழாவது நூலாகவும், அடியேனின் பொன்விழா ஆண்டு வெளியீடாகவும், ஆன்மீக வெள்ளிவிழா ஆண்டுவிழா வெளியீடாகவும் "செல்வமே சீர் தாருமே" நூல் அடியேனின் 14 வருட திருமண நிறைவு நாளில் 08-04-2006-ல் எம் உயிரோடு கலந்துவிட்ட ஜோதி ஸ்ரீ R. சிவலிங்கம் சென்னை அவர்கள் வெளியிட்டார்.

பதினெட்டாவது நூலாக "செந்திலாண்டவன் பாமாலை" 11-4-2006 பங்குனி உத்திர நாளில் என் வணக்கத்திற்குரிய பெரியவர் R. துரைசாமி அவர்களும் அன்பின் இனிய நண்பர் S.B. சுப்பையா அவர்களும் வெளியிட்டார்கள். நன்றி நன்றி.

பத்தொன்பதாவது நூலாக "அன்பு உதய மலர்" 14-4-2006 தமிழ் புத்தாண்டு ஸ்ரீவிய வருஷ வெளியீடாக சென்னை சன்மார்க்க சங்க ஜோதி ஸ்ரீ இராஜப்பா வெளியிட்டு புண்ணியத்தை தேடிக் கொண்டார்கள்.

இருபதாவது நூலாக வள்ளலார் விழியே 14-04-2006 தமிழ் புத்தாண்டு ஸ்ரீவிய வருஷ வெளியீடாக, ஆசிரியரின் 50 வயது பொன் விழா வெளியீடாக, சென்னை சன்மார்க்க சங்க ஜோதி ஸ்ரீ கணேஷ் அவர்கள் வெளியிடும் புண்ணியம் பெற்றார்கள். அவர்கள் இறைவன் அருளால் சகல நலன்களும் பெற்று வாழ்வாங்கு வாழ பிரார்த்திக்கின்றேன்.

இருபத்தோராவது நூலாக ஜோதிமணி மாலை 24-07-06 ஆடி அமாவாசையன்று நெய்வேலி சமரச சுத்த சன்மார்க்க சத்திய சங்க ஜோதி ஸ்ரீ நிர்மலா தேவி அவர்கள், மகன் ஜோதி ஸ்ரீ நகுலன், அவர்கள் மருமகள் ஜோதி ஸ்ரீ Dr. இரா. அருள்மொழி ஆகியோரது பரிபூரண அன்பால், உதவியால் வெளிவருகிறது.

இருபத்திரண்டாவது நூலாக ஜோதி ஐக்கூ அந்தாதி நம் இந்திய திருநாட்டின் 59வது சுதந்திர தினமான 15-08-2006 ல் சென்னை சன்மார்க்க சங்க ஜோதி ஸ்ரீ கோபி சிவம் அவர்கள் வெளியிடும் புண்ணியம் பெற்றார்கள்.

இருபத்து மூன்றாவதாக "சற்குரு ஜக்கி வாசுதேவ்" 2006 செப்டம்பர் ஈசா திருவிழாவின்போது நாகர்கோவில் அன்பர் பிரபாகர் வெளியிட்டு புண்ணியம் பெற்றார்கள்.

இருபத்து நான்காவதாக "சத்திய சாயி பாபா" 2006 நவம்பர் 23-ல் பாபாவின் 81-வது பிறந்த நாளில் நாகர்கோவில் சமிதி அன்பர் S. கிருஷ்ண பிள்ளை அவர்கள் வெளியிட்டு புண்ணியம் பெற்றார்.

இருபத்தைந்தாவது நூலாக 30-01-2007-ல் வள்ளலார் ஒளி வடிவாகி எங்கும் நிறைந்த 134 ஆண்டு பிறந்த தின வெளியீடாக "சனாதன தர்மம்" நூலை கன்னியாகுமரி சீடர்கள் சுயம்புகேசவன் இந்திராபாய் தம்பதியினரின் பெருங்கருணையால் வெளியிடப்படுகிறது.

என்றும் எம்மைக்காத்தருளும் எல்லா தூய ஆத்மாக்களுக்கும் என்றென்றும் நன்றியுடையவன் ஆவேன்!

எல்லோரும் சீரும் சிறப்புமாக வாழ்வாங்கு வாழ இறைவனை வேண்டுகிறேன்!

எல்லா உயிர்களும் இன்புற்று வாழ்க!


என்றும் உண்மையுள்ள,

**சிவ. செல்வராஜ்,**

கன்னியாகுமரி.



**விஜயன்**



**பாலு,** கோவை

# முகவுரை

எல்லாம் வல்ல இறைவன் அருளால் அடியேன் எழுதி வெளியிடும் இருபத்தைந்தாவது நூல் இந்த "சனாதன தர்மம்".

1992-ல் "கண்மணிமாலை" திருவருட் பிரகாசவள்ளல் இராமலிங்க சுவாமிகள் அருளாசியால் முதன் முதலாக வெளிவந்தது. தொடர்ந்து வந்தது இருபத்தைந்து நூற்கள்!

எத்தனையோ மகான்கள் இந்த புண்ணிய பூமியிலே! என்னை காத்து இரட்சித்தனர் பலர்! அவர்கள் அருளால் அவர்களை பற்றியும் நூற்கள் எழுதி வெளியிடும் பாக்கியம் கிட்டியது.

1956-ல் பிறந்த அடியேனுக்கு, இந்த பூமியில் பூவுடல் எடுத்து 50 ஆண்டுகள் ஆன இத்தருணத்தில் இந்த ஒப்பற்ற "சனாதன தர்மம்" வெளியிடும் பேறு கிடைத்தது. குரு அருளாலே!

1980-ல் திருச்சி ஞானசித்தர் ஜோதி இராமசாமிதேசிகர் அவர்களிடமிருந்து திருவடி தீட்சை பெற்று இருபத்தைந்து ஆண்டுகள் நிறைவுற்ற இவ்வேளையில் ஆன்மீக புரட்சி நூலான இந்த சனாதன தர்மம் வெளியிடுவதில் எல்லையில்லா பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

தீட்சை பெற்று முதல் பன்னிரண்டாண்டில் "கண்மணிமாலை" வெளியிடச் செய்து ஆன்மீக புரட்சியை வள்ளல் பெருமான் துவக்கி வைத்தார்!

"கண்ணுதலே நின்அடியார் தமையும் நோக்கேன்
**கண்மணிமாலைக்** கெனினும் கனிந்து நில்வேன்"

- திருவருட்பா - 1371

கண்மணிமாலை 150 ஆண்டுகள் கழித்து வெளிவரும் என முன்பே அறிந்து அன்றே இதன் பெருமையை எல்லோருக்கும் எடுத்தியம்பியிருக்கிறார் வள்ளல் பெருமான்!

தீட்சை பெற்ற இரண்டாவது பன்னிரண்டாண்டிற்குள் குரு ஜோதி இராமசாமி தேசிகர் கொடுத்தபடி வள்ளல் பெருமான் அடியேனை குருபீடத்திலமர்த்தி தீட்சை கொடுக்கவும் பணித்துள்ளார்கள்!

சனாதன தர்மம் உரைத்த ஞானிகள் பலர் ஆசியோடு அவர்கள் இட்ட பணியை செவ்வனே செய்து வருகிறேன்!

பூவுடல் எடுத்த பொன்விழா ஆண்டில், திருவடியை சரணடைந்த வெள்ளிவிழா ஆண்டில் குருபீடத்தில் அமர்ந்து பணி செய்யும்

இத்தருணத்தில் இருபத்து ஐந்து நூல்கள் வெளியிட்டதில் மிகவும் மகிழ்ச்சி! எடுத்த இப்பிறவி புனிதமடைந்தது!

இந்த "சனாதன தர்மம்" இதுவரை வெளியிட்ட நூல்களுள் சிகரம் போன்றது!

உலகத்திலேயே இப்படி அப்பட்டமாக ஞானத்தை யாரும் எடுத்தியம்பியதில்லை!?

திருவருட்பிரகாச வள்ளலாரே அடியேன் உள்ளத்திலிருந்து, உலகோர் அனைவரும் மரணமிலா பெருவாழ்வு அடைய வேண்டும் என்பதற்காக உரைத்த உண்மை இது!?

சனாதனதர்மமே சன்மார்க்கம்!
சாகாதவனே சன்மார்க்கி!

அடியேன் சென்னையிலும் நெய்வேலியிலும் பிரதிமாதமும் மூன்று தினங்கள் வந்து நாடி வருவோருக்கு ஞான தீட்சை வழங்கி வருகிறேன்.

வாருங்கள்! தேறுங்கள்!
வளம் பல பெற்று வாழ்வாங்கு வாழலாம்!

பற்பலராலும் பற்பல காலமாக மறைக்கப்பட்ட ஞான ரகசியங்கள் வெட்ட வெளிச்சமாகியுள்ளது இந்நூலில்! இது ஒரு ஞானப் பொக்கிஷம்!

கன்னியாகுமரியிலே நின்று தவம் செய்து, நித்தம் தவம் செய்வோருக்கு நித்தியத்துவம் வழங்கி அமுதம் வழங்கும், சித்தர்கள் ஞானிகள் போற்றி வணங்கும், வாலை அடியேனுக்கும் காட்சி தந்து அருள் பாலித்ததாலேயே அடியேனும் வாழ்கிறேன்!

அடியவருக்கு ஆபத்து என்றால் ஓடிவந்து காத்தருளும் சிரஞ்சீவி ஆஞ்சநேயன் அருள் பாலித்ததால்தான் அடியேன் வாழ்கிறேன்!

ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் ஒவ்வொரு ஞானியும் அருள் புரிந்தனர். இதுவே சனாதன தர்ம வழி நடப்பவன் பெறும் பெருமை!

உரைத்தேன்! உரைத்தபடி!! உள்ளதை!!!
உணர்வீர்! வாழ்வீர்!! பேரின்பமாகவே!!
எல்லா உயிர்களும் இன்புற்று வாழ்க!

**ஓங்குக சனாதன தர்மம்!**

# தங்கஜோதி ஞானசபை அறக்கட்டளை

நிரந்தர தலைவர்
திருவருட்பிரகாச வள்ளலார்

நிர்வாக தலைவர்



நகுலன், நெய்வேலி



கௌரவ தலைவர்



அரவிந்த், ஓசூர்

செயலாளர்



விமல், சென்னை

நிறுவனர்
ஆன்மிக செம்மல் ஞானசற்குரு
சிவசெல்வராஜ்

செயலாளர்



குமரேசன், ஓசூர்

பொருளாளர்



லோகநாதன், வேலூர்



பொருளாளர்



பத்மநாபன், ஓசூர்

## அறங்காவலர்கள்



Dr. அருள்மொழி
நெய்வேலி



Er. விஜயன்
கும்பகோணம்



M.J. சிவகுமார்
கும்பகோணம்



Er. N. ராஜு
கோயம்புத்தூர்



தங்கம்
கன்னியாகுமரி



சுயம்ஜோதி
கன்னியாகுமரி



இராதாகிருஷ்ணன்
நெய்வேலி



இராஜேஷ்
ஓசூர்



**கன்னியாகுமரி**
**தங்க ஜோதி ஞான சபை**
**ஞான சற்குரு சிவசெல்வராஜ்**
**எழுதி வெளியிட்டது தான் இவை!**
வடலூர் சத்திய ஞான சபையில் உண்மை அறிய
கன்னியாகுமரி தங்க ஜோதி ஞான சபை வருக!

## உலகில் முதலாவதாக ஞான இரகசியங்களை வெளிப்படுத்திய ஞானநூற்கள்!



ஞான தானம் செய்!

ஞான தவம் செய்!

# ஞான சற்குரு சிவசெல்வராஜ் அருளிய நூற்கள்

ஆன்மீகப் புரட்சி ஆரம்பம்
கண்மணி மாலை

ஆன்மீக தெளிவு அளித்தது
அருள்மணி மாலை

ஆன்மா உணர்த்திய அன்னைக்கு
ஸ்ரீபகவதி அந்தாதி

ஆன்ம நேயத்துக்கு ஒரு
அருட்பெருஞ்ஜோதி அந்தாதி

சன்மார்க்க நெறியை அறிய
சன்மார்க்க தெய்வம்

சன்மார்க்க நெறி நின்ற சற்குரு
கோவிந்த சுவாமிகள்

சன்மார்க்க குருக்களுக்கு சாற்றினேன்
அஷ்டமணி மாலை

சன்மார்க்கி இவன்என சாற்றுமே
செல்வமே சீர் தாருமே

ஞானம் அருள்வான் ஞான பண்டிதன்
செந்திலாண்டவன் பாமாலை

ஞானம் வேண்டின் ஞாலம் உணர
அன்பு உதய மலர்

ஞானம் தருவார் ஞானவள்ளல்
வள்ளலார் விழியே

ஞானம் பூரணமாக ஞான நூல்
ஜோதிமணி மாலை

சித்தம் தெளிந்த சித்தர்களுக்கு
ஜோதி ஐக்கூ அந்தாதி

சித்தர் இவரும் சிறந்தவரே
சற்குரு ஜக்கி வாசுதேவ்

சித்தர் இவர் சிறப்பு சீரியதே
சத்திய சாயி பாபா

சித்தர் வழியில் சிவசெல்வராஜ்
சனாதன தர்மம்

# அஷ்டாங்க ஞானம்

**“உள்ளே இருப்பது”**



க பிறவி

உ மரணம்

ங வாழ்க்கை

ச யார்குரு

ரு மறுபிறவி

சா உபதேசம்

எ தீட்சை

அ சனாதன தர்மம்

---



ராதா



கீதா

# க பிறவி

மனிதனாக பிறக்கவே மாதவம் செய்திடல் வேண்டும் என்றார்கள்.

அரிது அரிது மானிடராய் பிறத்தல் அரிது என்பது ஔவையார் வாக்கு.

மனிதனாக பிறந்த நாம்தானே மற்றெல்லா உயிர்களையும் அடக்கி ஆள்கிறோம்.

நாம் பிறந்த தேதி மாதம் வருடம் தெரியும் எங்கிருந்து பிறந்தோம்?

தாயின் கருப்பையில் 10 மாதம் இருந்தது தெரியுமா நமக்கு?

பிறந்து வளர வளரத்தானே ஒவ்வொன்றாக அறிகிறோம்.

தாய் தந்தை சுற்றம் உலகம் இப்படி ஒவ்வொன்றாக அறிந்து வளருகிறோம்.

அறிவிக்கப்படுகிறது. தெரிவிக்கபடுகிறது. சூழ்நிலையாலும் மாறுபடுகிறது.

அறிவிப்பவர் அறிவுக்கு தகுந்தபடி! புகட்டப்படுகிறது. இவையெல்லாம் எப்படி நிகழ்கிறது?

ஆணும் பெண்ணும் சேர்ந்தால் கரு உருவாகிறது! உருவாகும் கரு எல்லாம் உருப்பெறுவது இல்லை!

கல்யாணமாகி குழந்தையில்லை என ஏங்குவோர் கோடி கோடியாக உள்ளனரே!

ஆணும் பெண்ணும் சேர்ந்தால் பிண்ட உற்பத்தி மட்டும் தான்!

உடல் என்னும் அற்புதமான இயந்திரத்தை உருவாக்கியவன் யார்?

உடல் இயங்க அதற்கு உயிர் அவசியமல்லவா? உயிரை கொடுத்தது யார்?

மனிதனால் உயிரை கொடுக்க முடியுமா? உயிர் என்றால் என்ன?

கருவிலிருந்து வெளிவரும் குழந்தைக்கு உயிர் இருந்தால் தானே நாம் மகிழ்வோம்.

பிறக்கின்ற குழந்தை அழுதால் நாம் மகிழ்வோம்! பிறக்கின்ற குழந்தை அழவில்லையெனில் நாம் அழுவோம்!

கருவிலே உருவாகும் பிண்ட உற்பத்தி, அதன்பின் உயிர் சேர்தல் எப்படி நடக்கின்றது? யாரால்?

உருவானால்!? பத்திரமாக வளர்க்கத்தான் நம்மால் முடியுமே தவிர உருவாக்க முடியாது!?

நமக்கு அப்பார்ப்பட்ட ஒரு சக்தி இதையெல்லாம் நடத்துகிறதல்லவா?

அந்த சக்தி எது? எதன் அடிப்படையில் நடக்கின்றது?

இதற்கெல்லாம் விடை, உலகில் ஞானபூமியாக விளங்கும் இந்திய நாட்டின் ஞானிகள் தெளிவாக கூறியிருக்கிறார்கள்.

இந்த உலகம் எப்போது தோன்றியதோ! மனிதன் எப்போது தோன்றினானோ?!

கணக்கிட முடியாத காலத்திற்கும் முன்னது இங்கே இருந்த ஞானிகள் வாழ்க்கை! உபதேசம்! நூல்கள்!

உலகமனைத்திற்கும் ஒரே நெறி! ஒரே வாழ்க்கைமுறை! ஒரே கடவுள்! ஒரே பண்பாடு!

அதுவே "சனாதன தர்மம்!"

மனிதகுலம் அனைத்திற்கும், உலகில் எவ்விடத்தில் பிறந்தவராயினும் எல்லோரும் ஓரினமே என்றனர்.

ஆண் பெண் என உருவத்தால் இரு பிரிவே தவிர மனிதன் ஒருவனே!

மனிதனாக பிறந்த நாம் அனைவரும் ஓரினமே! நமது குலம் மனிதகுலம்!

ஜாதி, மதம், இனம் இன்னும் பல்வேறு வேற்றுமைகள் காலப்போக்கில் அறிவிலிகளால் ஏற்பட்ட மிகப்பெரிய துன்பம்.

எவ்வித பேதமுமின்றி நாம் அனைவரும் ஒன்றே என உலகம் உணர வேண்டும்.

எந்த நாட்டுக்காரனுக்கும் ஏழைக்கும், பணக்காரனுக்கும் எந்த மொழி ஜாதிக்காரனுக்கும் 10 மாதம்தான்!

உலகில் உள்ள மனிதர்கள் எல்லோருக்கும் உடல் உஷ்ணம், இரத்தம் உடல், உறுப்பு, இயக்கங்கள் ஒன்றுதான்!

ஒன்றேகுலம்! ஒருவனே தேவன்! இதுவே இந்திய ஞானிகளின் தாரக மந்திரம்.

கடவுள் ஒருவரே! நாமெல்லாம் அவர் பிள்ளைகளே. இதுவே உண்மை!

தாயும் தந்தையும் பிண்ட உற்பத்திக்கு தான் காரணம்! உயிர் கொடுப்பவர் தாயும் தந்தையுமான இறைவனே!

பிண்டத்தில் உயிர் இணைந்தால் தான் மனிதன்! சிவம்! இல்லாமல் பிண்டம் மட்டுமானால் சவம்.

உடலை கொடுத்த பெற்றோரையும் உயிரை கொடுத்த இறைவனையும் நாம் அறிய வேண்டாமா? உணர வேண்டாமா?

உயிரை எப்படி கொடுக்கிறான் இறைவன்? உடலை உருவாக்கும் பெற்றோரால் உயிரை கொடுக்க முடியாது!

உயிர் இருந்தால்தான் பிறப்பு.
உயிர் இல்லையேல் இறப்பு.

இந்த உலகில் பிறக்கும் நாம் அனைவரும் மனிதன் என்ற நிலையில் ஒரு குலம்.

ஆனால் 700 கோடி மக்கள் உள்ள இந்த உலகில் குணத்தால் 700 கோடி விதமாக இருக்கிறோம்.

உடல் ஒரே மாதிரிதான்!
உயிர் எல்லோருக்கும் ஒன்றுதான்!

பின் ஏன் இந்த வேறுபாடு? எதனால்? எப்படி? இதற்கு விடை இந்திய ஞானிகள் கூறுகிறார்கள்.

ஒரு மனிதன் பிறக்கிறது, அவன் இந்த பெற்றோருக்கு பிறப்பது இந்த ஊரில், இந்த சூழலில் என எல்லாம் நிர்ணயிக்கிறது ஒரு சக்தி!

ஒவ்வொருவரும் செய்த பாவ புண்ணிய வினைகளுக்கு தக்கபடி பிறவி அமைகிறது.

பிறப்பை தீர்மானிக்கின்ற அந்த மாபெரும் ஒப்பற்ற சக்தியே உயிரை கொடுக்கின்றது!

பிறப்புக்கு காரணம் கர்மவினை! எத்தனை பிறவி எடுத்தோமோ? எவ்வளவு பாவ, புண்ணியம் செய்தோமோ?

இதை அறிய, பிறப்பைப் பற்றி நாம் அறிய, பிறப்புக்கு காரணமான வினையோடு உயிரை கொடுத்த இறைவனிடம் தான் கேட்க வேண்டும்.

வினைகளோடுதான் பிறப்பு!? வினைக்கு தகுந்தபடிதான் பிறப்பு! யாருமே இதற்கு விதிவிலக்கல்ல!

"வினைபோகமே ஒரு தேகங்கண்டாய்
தினை போதும் நில்லென்றால் நில்லாய்"

என ஞானிகள் அழகாக கூறியிருக்கிறார்கள்.

பிறக்கும்போது நாம் கொண்டு வருவது நாம் முற்பிறவிகளில் செய்த கர்மத்தில் ஒரு பகுதியே!

பிறப்பில் வரும் கர்மம் பிராப்தம்-பிராரத்துவம் என்பதாகும்.

பிறந்து நாம் செய்வது ஆகாமியம்! பிறப்பில் வந்த பிராரத்துவம் போக மீதி இருப்பதே சஞ்சித கர்மம்! ஆக மூன்றுவிதம்.

இந்த கர்ம வினைகளில் பிராரத்துவமே எல்லா பிறப்பிலும் எல்லோருக்கும் வருவது.

அதாவது நாம் பல பிறவிகளில் செய்த பாவம் கொஞ்சம், புண்ணியம் கொஞ்சம் இரண்டையும் சேர்த்து இறைவன் நாம் பிறக்கும்போது உயிரோடு இணைத்து, சூட்சும நிலையில் வைத்து பிறப்பிக்க வைக்கிறார்.

உயிர் பிண்டத்தில் வரும்போது தான் கர்மவினையும் கூடவே வருகிறது.

பிண்ட உற்பத்தியில் முதன் முதலாக உருவாகும் உறுப்பில்தான் உயிர் சேர்கிறது! இதுவே ஞானிகள் கண்டறிந்த உண்மை!

அங்கமதில் முதல்முதலாய் தோன்றிய தலம் எது? அதை சொல்லி, அதில் உயிர் இருக்கும் தன்மையை சொல்பவனே உண்மையான குரு என அகஸ்தியர் கூறுகிறார்.

தாயின் கருப்பையிலே முதன்முதலாக உருவாவது கண். தந்தையின் சுக்கிலமும் தாயின் சுரோணிதமும் சேரும்போது முதலில் உருவாவது ஒரு கண்.

அது இரண்டாகி இரு கண்களாகிறது. சுக்கில சுரோணித ஒளியே இருகண்களில் துலங்கி, அந்த ஒளியே வெதுப்பி வெதுப்பி பிண்டம் வளருகிறது.

பிண்ட உற்பத்தி ஓரளவு வளர்ச்சியடைந்த பின்னரே, உயிர் வினையால் மூடப்பட்டு இறைவனால் உடலில் சேருகிறது.

பிறப்பின் இரகசியம் இதுவே!?

உடல் வளர்ந்து உயிர் சேர்ந்த பின்னரே மனிதன் பிறக்கிறான் வினைகளுக்கு தகுந்தபடி!

பிறவிக்கு வித்து கர்மவினைகளே! கர்ம வினைகள் இருக்கின்றவரை பிறவி உண்டு! பிறப்பு நிகழக் கூடாதென்றால் கர்மவினை இருக்கக்கூடாது!

வினையால் உயிர் பிறக்கிறது!<br>
பிறப்பறுக்க வந்ததுவே இம்மானிட பிறவி!

ஏன் பிறந்தோம்? இனி பிறவாமல் இருக்க! பிறப்புக்கு காரணமான வினைகளை தெரிந்து அதை இல்லாமலாக்குவதே சாதனை!

வினைகளை அழிக்க வேண்டுமாயின், அதை கொடுத்த உயிரான அந்த இறைவனை சரண் அடைவதைத்தவிர வேறு வழிகிடையாது!?

எல்லாம்வல்ல, எங்கும் நிறைந்த சர்வமுமான அந்த இறைவனே ஊசிமுனை அளவு நெருப்பாக-ஜோதியாக-நம் உடலில் கண்களில் உயிராக துலங்கு கின்றான்!

ஞானிகள் உரைத்த சத்திய வார்த்தை இது!

ஏன் பிறந்தோம்? முற்பிறவிகளில் செய்த வினையால்!

அது எங்கிருக்கிறது? நம் உடலில் கண்களில் உயிரை மறைத்துக் கொண்டு சூட்சும நிலையில்!

இதை சொல்லித்தரும் ஞான குருவை பணிந்து தெரிந்து கொள்க. உணர்ந்துகொள்க.

பிறந்துவிட்ட நாம், இனி பிறக்காமல் இருக்க, வினைகளை அழிக்க வேண்டும்! பிறவிக்கு காரணமானது அதுதானே!

இனி பிறப்பதும் பிறக்காமல் இருப்பதும் நம் கையில்! நம் கண்களில் ஒளியாய் துலங்கும் இறைவனை, நம் உயிரை தக்க வைப்பதில்தான் இருக்கின்றது.

"தாயின் அரவணைப்பால் மனிதன் வளர்கிறான்!"
"தந்தையின் பராமரிப்பால் மனிதன் உயர்கிறான்!"
"குருவின் கண்காணிப்பால் மனிதன் தெய்வமாகிறான்!"

பிறந்தது நாம் விரும்பியல்ல!

இது இறைவன் நமக்கு கொடுத்த வரம்!

பிறவிக் கடலிலிருந்து விடுபட ஒரு வாய்ப்பு!

இந்த பிறவியிலாவது இவன், தான் யார்? எப்படி வந்தேன்? வாழ்கிறேன் என்பதை உணர்கிறானா?! கடைத் தேறுகிறானா?! பார்ப்போம் என நமக்கு ஒரு வாய்ப்பு தந்து அருளியிருக்கிறார். இறைவன்!

இறைவன் நமக்கு தந்த அருள் இம்மானிட பிறப்பு! அறிவோமாக! உணர்வோமாக! கடைத்தேறுவோமாக!

**நாமெல்லாம் திவ்ய ஆத்ம சொருபம்!**
**நாமெல்லாம் பரமாத்மாவின் அம்சம்!**

***



பகவான் ஸ்ரீ சத்திய சாயிபாபா

உ

# மரணம்

பிறந்து விட்ட உயிர் முடிவது மரணம். மடிவது - மரணம். பிறப்பு ஆரம்பம் என்றால் இறப்பது இறுதி.

இது உலக நியதி! இயற்கை!

ஒரு இயக்கத்தின் முடிவு உடலாகிய இயந்திரம் தன் செயல்பாட்டை முடித்துக் கொள்வது.

பிறந்து சில நாளிலே இறக்கிறான் ஒருவன். பிறக்கும் போதே இறந்தே பிறக்கிறது குழந்தை. பிறந்து சில வருடங்களிலே இறக்கிறது. இன்னொன்று பிறந்து பல வருடங்கழித்து இறக்கிறான் இன்னொருவன்.

பிறந்த மானிடன் எல்லோரும் ஒரே மாதிரியாகவா இறக்கிறார்கள்?

பிறந்ததும் இறப்பதும் ஒரேமாதிரி இல்லை? ஏன்? நாமெல்லாரும் மனித ஜாதிதானே!

வித்தியாசம் வினையிலேதான்! பிறப்புக்கு காரணம் எப்படி வினையோ!, அதுபோலவே இறப்புக்கு காரணமும் வினையே!?

இறப்புக்கு காரணம் ஆகாமிய கர்மமே! பிறந்தபின் செய்யும் கர்மமே!

பிராரத்துவத்தால் பிறக்கும் மனிதன் தன்னை உணர முற்படுவானேயானால் இப்போது செய்யும் கர்மம் ஆகாமியம் இல்லாமலாகிவிடும்.

அதுதான் ஞான சாதனை! மரணம் வராமல் தடுக்கலாம்!? எப்படி?

உடலை விட்டு உயிர் பிரிதல் தானே மரணம்? பிரியாமல் இருந்துவிட்டால்!?

உடலில் உயிர் இருக்கும் விதம் அறிந்து, உணர்ந்து தங்க வைப்பதே சாதனை!

உடலில் இருந்து உயிர் ஏன் பிரிகிறது? இந்த உடலில் உயிர் இருக்க லாயக்கில்லை என்னும்போது பிரிந்து விடுகிறது,

உடலை நாம் கெடுத்துக் கொள்வதுதான் காரணம். இயற்கையாக வரும் முதுமை ஒருபுறம். நாமாக கெடுத்து உடலை தளர்வடைய செய்வது மறுபுறம்!

உடல் கெட்டுப் போவதால்தான் உயிர் விட்டுப் போகிறது.

நம் உடலை நல்லமுறையில் பேணியாதுகாத்தோமானால், நமது முன்னோர்கள் ஞானிகள் உரைத்தபடி போற்றி வளர்த்தோமானால் உடல் கெடாது - உயிர் பிரியாது.

உடல் கெட்டுப்போக மாமிச உணவு உட்கொள்தல் முதல் காரணம். மீன் முட்டை மிருகங்கள் பறவைகள் இறைச்சியை உண்பது. மரணத்தை விலைகொடுத்து வாங்குவதற்கு சமம்.

அசைவ உணவு சாப்பிடுவது மனிதகுலத்திற்கு உகந்ததல்ல! மனிதன் உடல் குடல் மற்றும் ஜீரண உறுப்புகள் மாமிச உணவை ஜீரணிக்க ஏற்றதாக இல்லை.

ஜீரணமாகாத உணவை, அசைவ உணவை உட்கொள்ளும் மனிதனின் உடல் உள்ளுறுப்புகள் கெட்டுப் போகின்றன. ஜீரண உறுப்புகள் விரைவில் செயலிழந்து போகின்றது. மரணம் அதி விரைவில் தேடி வருகிறது.

மனித உடல் - குடல் அமைப்புகள் இறைச்சி உணவை உட்கொள்ள ஏற்றதல்ல! தாவரங்கள் காய்கனிகளை உட்கொள்ளத்தக்க வகையிலேயே இறைவன் படைப்பு உள்ளது.

இறைவன் படைப்பை மீறுபவன், இயற்கைக்கு விரோதமாக செயல்படும் மனிதன் விரைவில் மரணத்தை தழுவுகிறான்.

"எவ்வுயிரும் தம் உயிர்போல் எண்ணும்" மனிதனே மகாத்மா ஆகிறான். இறைவன் அருளுக்கு பாத்திரவானா கிறான்.

உயிர்களை கொல்பவன் மிருகம்! பிணங்களை தின்பவன் நடமாடும் இடுகாடு! எல்லா உயிர்களையும் நேசிக்கத்தான் இந்த உலகத்தில் தோன்றிய எல்லா ஞானிகளும் கூறியிருக்கிறார்கள். அன்பு காட்டத்தான் கூறியிருக்கிறார்கள் அறுத்து தின்ன கூறவில்லை!

மரணம் வராமலிருக்க முதலில் சைவ உணவு பழக்கத்திற்கு வாருங்கள். மரக்கறி உணவே மனிதகுல உணவு.

இன்றைய உலகில் புதுப்புது வியாதிகள் வரக்காரணமே மாமிசம் உண்பதால்தான்!

நோய்கிருமிகள் தாக்குதல், உயிர்களை கொல்லும்போது அந்த உடலில் வெகு சுலபமாக பரவி விடுகிறது.

அதை தின்பவனுக்கும் வெகுவிரைவில் அந்த விஷக் கிருமிகள் பரவி உடலில் புதுப்புது வியாதிகள் வரக் காரணமாகின்றது.

பட்ட பின்பாவது புத்தி வருகிறதா?

நமது உடல் உறுப்புகள் மிகவும் மென்மையானது. இறைச்சி உணவு நம் உடலில் நோய் எதிர்ப்பு சக்தியை குறைத்து விடுகிறது. உடல் கடின தன்மையாகி விடும்.

"கொல்லான் புலாலை மறுத்தானை கைகூப்பி
எல்லா உயிரும் தொழும்" - குறள்

திருவள்ளுவர் உரைத்தபடி வாழ்வதே உன்னதமான வாழ்க்கைநெறி

மரணத்தை வரவேற்கும் அடுத்த பழக்கம் மது போதை பழக்கம்!

குடிப்பவன் குணத்தை இழக்கிறான்! போதையில் மிதப்பவன் மனிதனல்ல மிருகம்!

எல்லாவிதமான போதைதரும் பொருட்களும் நமது உடலில் கல்லீரல், கணையம் நுரையீரல் குடல் ஆகியவைகளை சேதப்படுத்துகிறது. செயலிழக்கச் செய்கிறது.

உடல் கெட்டால் உயிர் தங்காது. ஏனோ மனிதன் அறிவு கெட்டு அலைகிறான். மது குடிப்பவன், புகை பிடிப்பவன் மற்றும் போதை மருந்துகள் உபயோகிப்பவன் யாரும் வாழ்ந்ததாக இதுவரை சரித்திரம் இல்லை.

குடி குடியை கெடுக்கும்! குடி வீட்டுக்கு நாட்டுக்குகேடு! என மதுகடைகளை திறந்து விற்பனை செய்யும் அரசாங்கமே விளம்பரம் செய்வதை பார்த்த பிறகாவது திருந்த வேண்டாமா?

குடிமகன் என்பது பலருக்கும் பொருந்தும்!

மரணத்தை வெல்ல வேண்டுமானால் மனதை செம்மைப்படுத்த வேண்டும் இறைவன் திருவடியில் இருந்தால் மனம் சீர்படும்.

மனம்போன போக்கிலே போகாமல் மனதை நிலைநிறுத்த வேண்டுமாயின் நல்ல நெறியில் நிலைக்க வேண்டும்.

மனதை மயக்கும், அறிவை கெடுக்கும் தன் நிலையை இழக்கச் செய்யும் போதை பொருட்களை உபயோகிப்பவன் ஒருக்காலும் உருப்படவே மாட்டான்.

அறிவை பெருக்குவதே ஞானம். அறிவை கெடுக்கும், மயக்கும், செயலிழக்கச் செய்யும் போதை வயப்பட்டவன் எப்படி மரணத்திலிருந்து தப்பிக்க முடியும்?

இருப்பதோ அற்ப அறிவு! சொற்ப அறிவு! அதை வளர்க்க பாடுபட வேண்டுமா? இருப்பதையும் அழிக்க வேண்டுமா?

சிந்திப்பவனே மனிதன்! சிந்திக்க முடியாமல் மயக்கத்தில் இருப்பவன் நடைபிணம்!

சீக்கிரமே பிணமாக தன்னை தயார்படுத்திக் கொள்கிறான் குடிகாரன்!

புகைபிடிப்பவனும் கொஞ்சங் கொஞ்சமாக புற்று நோயை வரவேற்கிறான்.

கஞ்சா குடித்து பரவச நிலையடைவதாக சிலர் அறிவில்லாமல் பிதற்றுவதை பாமரர்கள் கேட்டு அவர்களும்

கெட்டுப் போகிறார்கள். கஞ்சா அதிகமானால் நரம்பு தளர்ச்சி வரும் பைத்தியம் பிடிக்கும்.

சித்தர்களும் ஞானிகளும் மனிதன் நல்ல நெறியாக வாழ வேண்டும் - ஒழுக்கமாக வாழ வேண்டும் என மீண்டும் மீண்டும் வலியுறுத்தியிருக்கின்றனர். கஞ்சா குடித்து ஞானம் பெற்றவர் யாருமில்லை.

மனிதன் மனிதனாக வாழ வேண்டுமானால், மரணம் வராது தடுக்க வேண்டுமானால் எந்த தீய பழக்க வழக்கமும் இருக்கவே கூடாது என உபதேசித்துள்ளார்கள்.

சமுதாய அந்தஸ்து என இளைய தலைமுறை குடிக்க ஆரம்பிக்கிறார்கள். சமுதாய சீரழிவே இங்குதான் ஆரம்பமாகிறது.

மனிதன் கெட்டுப்போக எல்லா வழிகளும் திறந்திருக்கிறது.

ஏ! மனிதா! மனிதனாக நடந்துகொள்!?

உடம்பார் அழியின் உயிரார் அழிவர்
திடம்பட மெஞ்ஞானம் சேரவும் மாட்டார்
உடம்பை வளர்க்கும் உபாயம் அறிந்து
உடம்பினை வளர்த்தேன் உயிர் வளர்த்தேனே

திருமூலர் உரைத்த திருமந்திரமே, தமிழ்மந்திரம், தமிழ் வேதம். ஒப்பற்ற ஞானி திருமந்திரத்தில் உரைத்தபடி உடம்பை வளர்க்கும் நல்லநெறியோடு பண்போடு வாழ்ந்து மரணம் வராது உயிரை வளர்ப்போமாக!

அடுத்து மரணம்வர காரணம் காமம். பெண்ணாசை கொண்டு அதிக போகத்தில் ஆழ்பவன் வெகுசுலபமாக மரணமடைகிறான்.

சிற்றின்பத்தில் ஈடுபாடு உள்ளவன் இறைவனை அடையும் பேரின்ப நிலை பெறமாட்டான்.

பெண்ணாசையால் கெட்டதற்கு உதாரணம் இராமாயணம். ஒப்பற்ற சிவ பக்தனாயிருந்தும் பெண்ணாசையால் சிற்றின்ப வயப்பட்டு பேரின்ப பெருவாழ்வை இழந்தான் இராவணன்.

நமது புராணங்களிலும் கதைகளிலும் இதுகுறித்து ஏராளமான படிப்பினைகள் உள்ளன. எதிலும் மிதபோகம் வேண்டும்.

பெண்ணோடு வாழும் நாம், பெண்ணால் பிறந்த நாம் பெண்ணாசையை விட்டு வாழ வேண்டும். அதுதான் அறிவுடமை!

பெண்களை வெறுக்கச் சொல்லவில்லை! பெண் ஆசையைத்தான் விடச் சொன்னார்கள்!

ஒருவனுக்கு ஒருத்தி! இதுவே இந்திய கலாச்சாரம். நமது பண்பாடு. வாழும் நெறி.

கல் ஆனாலும் கணவன்-புல் ஆனாலும் புருஷன் என பதிவிரதா தன்மையை மேம்படுத்தும் மாதரசிகள் பலர்வாழ்ந்த புண்ணிய பூமி இது!

உலகத்துக்கே, எப்படி வாழ வேண்டும் என வாழும் நெறியை "சனாதன தர்மத்தை" போதித்தது நம் தாய் திரு நாடே!

"இல்லறமல்லது நல்லறமன்று"
"ஒருவனை பற்றி ஓரகத்திரு"

என ஔவையார் போதித்த ஒழுக்க நெறியே உயர்ந்தது. உன்னதமானது.

"ஒரு நாளைக்கு இரண்டு
ஒரு வாரத்துக்கு இரண்டு
ஒரு மாதத்திற்கு இரண்டு
ஒரு வருடத்திற்கு இரண்டு"

என வாழ்ந்தால் நோய் நொடியின்றி மரணம் இல்லாது வாழலாம் என ஞானியர் கூறியிருக்கிறார்கள்.

ஒரு நாளைக்கு இருமுறை மலஜலம் கழிக்கவேண்டும்.

ஒரு வாரத்துக்கு இருமுறை எண்ணெய் தேய்த்து குளிக்க வேண்டும்.

ஒரு மாதத்துக்கு இருமுறை மனைவியுடன் சேர்ந்து இருக்கலாம்.

ஒரு வருடத்துக்கு இருமுறை வாந்திக்கு மருந்து சாப்பிடனும்.

ஒரு மனிதன் இப்படி இருந்தால் உடல் ஆரோக்கியமாக 100 வருடங்கள் வாழ்வான் என்றனர்.

இதுபோல இன்னும் பல நோயணுகா விதிகளை நம் முன்னோர்கள் கூறியிருக்கின்றனர்.

"பெண்ணை காமக்கண்ணோடு பார்ப்பவன் மரணமடைவான்"

"பெண்ணை கடவுள் கண்ணோடு பார்ப்பவன் ஞானமடைவான்"

நமது ஞானிகள் பெண்ணை தாயாக பார்த்தார்கள். ஞானம் பெறுமுன் அமுதூட்டும் வாலை குமரியாக-கன்னியாக கண்டு வழிபட்டார்கள் இதுதான் நமது கலாச்சாரம்.

மரணம் எப்படி இருக்கும்?! மயக்கம் - தூக்கம் - மரணம் என மூன்றுநிலை உள்ளது. மயக்கம் என்பது நம் உணர்வு பிசகும் நிலை. உயிர்நிலை கொள்ளாமல் தடுமாறுவதே மயக்கம், மிகக்குறுகிய காலம் உணர்வு இல்லாமல் போவது.

தூக்கம் - நம் உடல் உறுப்புக்களுக்கு ஓய்வு கொடுக்கும் நேரம். உயிர் நிலைகொள்ளும் நேரம், ஒடுங்கும்நேரம், நடு உடலில் ஒடுங்கும். மிகக் குறைந்த அளவில் உணர்வு இருக்கும்.

மரணம் என்பது உயிர் உடலில் இருக்க முடியாமல் உடலை விட்டு வெளியேறுதல்.

மரணம் நம் கையில்!? தடுக்கலாம்!?

மரணம் வர காரணமான ஆகாமிய கர்மம் பாதிக்காத தன்மை பெறவேண்டும். உடலை விட்டு உயிர் பிரியாமல் மிக மிக கவனமாக பார்த்துக்கொள்ள வேண்டும்.

உடலில் உயிரை இறைவன் எங்கு பத்திரமாக வைத்திருக்கிறானோ?! அங்கேயே அதை பத்திரபடுத்துவது தான் புத்திசாலித்தனம்!

அது அங்கேயே இருக்கச்செய்து விட்டால் அதுதான் ஞான சாதனை! தவம்!

பிறந்தது இறப்பதற்கல்ல! இறப்பை வெல்வதற்கு! அதுவே ஞானம்.

இதை உரைத்ததுவே சனாதனதர்மம். எல்லா மனிதர்களும் மரணம் வராமல் தடுக்க பாடுபட வேண்டும்.

“தூங்கி விழிக்க மறந்தவன்” என இறந்தவனை வள்ளலார் குறிப்பிடுகின்றார்.

இன்றைய உலகில் மனிதன் சாப்பாடு சாப்பாடு என அலைகிறான்.

சாப்பிடத்தான் வாழ்கிறான் அதற்குத்தான் உழைக்கிறான் பணம் சேர்க்கிறான்.

ஒவ்வொரு மனிதனும் தெரிந்தோ தெரியாமலோ சாப்பாட்டுக்காகவே வாழ்கிறான்! பிறந்ததே சாப்பாடுக்காகத் தான்!

சாப்பாடு அல்ல! சாவுக்கான பாடு சா-பாடு!? சாவதற்காக படாத பாடுபடுகிறான். எப்படியோ சாகிறான்!

**சாகக்கூடாது என்பதே சித்தர்கள் உபதேசம்!**
**சாகாதவனே சன்மார்க்கி!**

* * *



**M.G. ராஜா**
M. கோபாலன் ஆசான் வர்ம மசாஜ் சென்டர்



**விமல்,** சென்னை

# வாழ்க்கை

மனிதர்களாகிய நாம் வாழ பிறந்தவர்கள். சந்தோஷமாக வாழ வேண்டும். நோய் நொடியின்றி நலமுடன் சிறப்புடன் வாழ வேண்டும். அதுதான் வாழ்க்கை!

ஏழையாக பிறந்தாலும், பணக்காரனாக பிறந்தாலும் எல்லோரும் எங்கும் சுகமாக வாழ சனாதன தர்மம் வழிகாட்டுகிறது.

எப்படியோ? பிறந்து விட்டோம்! பிறந்தபின் நாம் வாழ்கின்ற வாழ்வை நெறிப்படுத்தி வாழ்வாங்கு வாழ வேண்டும்.

நமது நாட்டில் வாழ்ந்த ஞானிகள் வாழ்க்கை வரலாறுதான் நமக்கு பாடம். நல்லதை படிக்க வேண்டும், பிடித்துக்கொள்ள வேண்டும்.

ஒவ்வொரு ஞானியின் நூலுமே நமக்கு ஒவ்வொரு பாடந்தான்! பொக்கிஷந்தான்.

"என் வாழ்க்கையே என் செய்தி" என மிக அழகாக ஒரு ஞானி கூறியிருக்கிறார்.

பெரியபுராணம் 63 நாயன்மார் வரலாறை கூறும் நூல். நன்றாக சிந்தித்து பாருங்கள். நமது நாட்டில் இறைவன் அடியார்கள் மொத்தம் 63 பேர்கள் தானா?

தூய்மையான, ஒப்பற்ற, உன்னதமான இறையடியார்கள் நம் நாட்டில் லட்சோபலட்சம் பேர்கள்!

சேக்கிழார் ஏன் 63 பேரை மட்டும் எடுத்துக்கொண்டார்?

பெரியபுராணத்தில் வரும் 63 பேரும் பற்பல ஜாதிகளில் பிறந்தவர்கள். பற்பல தொழில் செய்தவர்கள். பற்பல நிலைகளில் இருந்தவர்கள். இறைவனை அடைவதில் மட்டும் அனைவரும் ஒரே ஏகம். தீவிர பக்தி அன்பு ஒழுக்கம் நெறிப்படி வாழ்ந்தார்கள்.

"எத்தொழிலை செய்தாலும் ஏதவஸ்தைபட்டாலும் முத்தர்

மனம் இருக்கும் மோனத்தே" என்ற சித்தர் வாக்கு பரிபூரண மான முழு உண்மை.

இதுதான் நமக்கு பாடம்! படிப்பினை! நீ எந்த நிலையில் இருந்தாலும் சரி, இறைவன் உன்னை காத்தருள்வார் என பறைசாற்றுகிறது. இப்படியேதான் நம் புராணங்கள் எல்லாம்.

மனிதன் மனிதனாக வாழவேண்டும். தன்னிடமுள்ள துர் குணங்களை விலக்க வேண்டும்.

மனதை இதம் பண்ண நமக்கு நம் முன்னோர்கள் கற்றுத் தந்திருக்கிறார்கள். நல்ல ஒழுக்கம், நல்லநெறி, பண்பாடு, கலாச்சாரம், அன்புவழி நடக்க போதனை தந்துள்ளார்கள்.

அப்படி நடந்து நம் மனதை நாம் பக்குவப்படுத்து வோமானால் நாம்தான் மனிதன். மனிதனாக உருகொண்டு பிறந்த நாம் முழுமையான நல்ல மனிதனாக வேண்டும்.

நல்ல ஒரு மனிதனே, நல்ல ஒரு ஆத்மாவே மகாத்மா ஆகிறான். கடவுள் ஆகிறான், எல்லோராலும் போற்றி வணங்கப்படுகிறான்.

கர்ம வினையால் சூழப்பட்டு பிறந்த நாம் அதிலிருந்து விடுபட செயல்படுவதே மிகவும் முக்கியமானதாகும்! இதுவே தவம்.

வினையறுக்க பாடுபடுவதே வாழ்க்கை. வினையறுத்து விமலனுடன் இணைவதே பேரின்ப பெருவாழ்வு.

குருவும் சீடர்களும் என்ற பந்தம் ஒவ்வொருவர் வாழ்விலும் ஏற்பட வேண்டும்.

மாதா பிதா பெற்ற ஒவ்வொருவரும் வாழ்க்கையில் குருவை பெற்றே ஆக வேண்டும்.

அவரால், நம் பிறப்பின் நோக்கம் அறிந்து சாதனைகள் செய்து தப்பிக்கலாம். குருவை பெற்றவன் வாழ்வே பூரணம்.

இன்றைய உலகில் மனிதன் எப்படியெல்லாமோ வாழ்கிறான். மனம்போன போக்கிலே போகிறான்.

60 வருடம் 80 வருடம் வாழும் வாழ்க்கையில் ஊரார் போற்றும்படி எத்தனை பேர் வாழ்கிறார்கள்.

"ஈன்ற பொழுதில் பெரிதுவக்கும் தன்மகனை
சான்றோன் என கேட்டதாய்" - குறள்

நம்மை சான்றோன் என ஊர் போற்றுமானால் அதுதானே நம்மை பெற்ற தாய்க்கு மிகவும் சந்தோஷம். அப்படித்தானே நம் வாழ்க்கை இருக்க வேண்டும்.

சடமொன் றெடுத்தால் புவிக்குநல் லவனென்று
தன்பேர் விளங்க வேண்டும்
சதிருடன் இதல்லாது மெய்ஞ்ஞானி என்றவ
தரிக்கவே வேண்டும் அல்லால்
திடம் இனிய ரணசூர வீரனிவன் என்னவே
திசைமெச்ச வேண்டும் அல்லால்
தேகியென வருபவர்க் கில்லையென் னாமலே
செய்யவே வேண்டும் அல்லால்
அடைவுடன் பலகல்வி ஆராய்ந்து வித்துவான்
ஆகவே வேண்டும் அல்லால்
அறிவான துரைமக்கள் ஆகவர வேண்டும் இவர்
அதிகபூ பால ரையா
வடகுவடு கிடுகிடென எழுகடலும் அலையெறிய
மணியுரகன் முடிக ணெரிய
மயிலேறி விளையாடு குகனேபுல் வயல்நீடு
மலைமேவு குமரேச னே - **குமரேச சதகம்**

மனிதனாக பிறந்தால் இதில் ஏதாவதொன்றாவது செய்து வாழ்ந்தால் அவனே மனிதன். இதுவல்லாமல் பிறந்தவன் வாழ்க்கை வீண்.

எப்படியும் வாழலாம் என்பது முட்டாள்தனம்! இப்படித்தான் வாழ வேண்டும் என்பதே அறிவுடமை!

திருவருட் பிரகாச வள்ளலார் இராமலிங்க சுவாமிகள் "மனுமுறை கண்ட வாசகம்" என்ற நூலில் மனிதன் எப்படி வாழ வேண்டும் எனத் தெளிவாக கூறியிருக்கிறார்கள்.

திருவருட்பா உபதேச பகுதியில் ஒரு மனிதன் காலை எழுவது முதல் இரவு படுக்க போவதுவரை என்னென்ன செய்ய வேண்டும் என்பதை "நித்திய கருமவிதி" என கூறி அருளியிருக்கிறார்கள்.

**மனுமுறை கண்ட வாசகம் - திருவருட்பா**

## என்ன பாவம் செய்தேனோ

நல்லோர் மனதை நடுங்கச் செய்தேனோ
நட்டாற்றில் கையை நழுவ விட்டேனோ
வலிய வழக்கிட்டு மானங் கெடுத்தேனோ
வரவு போக்கொழிய வழியடைத்தேனோ
தானம் கொடுப்போரைத் தடுத்து நின்றேனோ
தருமம் பாராது தண்டஞ் செய்தேனோ
கலந்த சினேகிதரை கலகஞ் செய்தேனோ
களவு செய்வோருக்கு உளவு சொன்னேனோ
மனமொத்த நட்புக்கு வஞ்சகஞ் செய்தேனோ
மண்ணோரம் பேசி வாழ்வழித்தேனோ
குடிவரி உயர்த்தி கொள்ளை கொண்டேனோ
குடிக்கின்ற நீருள்ள குளத்தைத் தூர்த்தேனோ
ஏழைகள் வயிறு எரியச் செய்தேனோ
இரப்போர்க்குப் பிச்சை இல்லை என்றேனோ
உயிர்க்கொலை செய்வோர்க்கு உபகாரம் செய்தேனோ
ஊன்சுவை உண்டு உடல் வளர்த்தேனோ
பொருளை இச்சித்து பொய் சொன்னேனோ
பொதுமண்டபத்தைப் போயிடித்தேனோ
ஆசை காட்டி மோசஞ் செய்தேனோ
அன்புடையவர்க்குத் துன்பஞ் செய்தேனோ
வேலையிட்டுக் கூலி குறைத்தேனோ
வெய்யிலுக்கு ஒதுங்கும் விருக்ஷத்தை அழித்தேனோ
பசித்தோர் முகத்தைப் பாராதிருந்தேனோ

பகைகொண்டு அயலோர் பயிரை அழித்தேனோ
கோள் சொல்லிக் குடும்பங்களை கலைத்தேனோ
கலங்கி ஒளித்தோரைக் காட்டிக் கொடுத்தேனோ
கற்பழிந்தவளைக் கலந்திருந்தேனோ
கணவன் வழிநிற்போரைக் கற்பழித்தேனோ
காவல் கொண்டிருந்த கன்னியை அழித்தேனோ
கருப்பமழித்துக் களித்திருந்தேனோ
கற்றவர் தம்மை கடுகடுத்தேனோ
கன்றுக்குப் பாலூட்டாது கட்டி வைத்தேனோ
குருவை வணங்கக் கூசி நின்றேனோ
குருவின் காணிக்கை கொடுக்க மறந்தேனோ
பக்ஷியைக் கூண்டில் பதைக்க அடைத்தேனோ
பெரியோர் பாட்டில் பிழை சொன்னேனோ
கல்லும் நெல்லும் கலந்து விற்றேனோ
தவம் செய்வோரைத் தாழ்வு சொன்னேனோ
ஆலயக் கதவை அடைத்து வைத்தேனோ
சிவனடியாரைச் சீறி வைதேனோ
சுத்த ஞானிகளைத் தூஷணம் செய்தேனோ
மாதா பிதாவை வைது நின்றேனோ
தந்தை தாய் மொழியைத் தள்ளி நடந்தேனோ
தெய்வத்தை இகழ்ந்து செருக்கடைந்தேனோ
என்ன பாவம் செய்தேனோ!

என மனிதன் செய்யக்கூடாத செயல்களை கூறியிருக்கிறார்.

இதுபோன்ற பாவங்களை செய்யாமல் உத்தமனாக வாழ்வதே வாழ்க்கை

அவரவர் வாழ்க்கை அவரவர் கையில்!

நாம் செய்த முற்பிறவி பிராரத்துவ வினையால் பிறந்த நாம், இப்பிறப்பில் மேலும் மேலும் பாவஞ்செய்யாமல், நல்ல குருவை பணிந்து, திருவடி தீட்சை பெற்று இப்போது

செய்கின்ற கர்மங்களை பகவான் பாதத்தில் அர்ப்பணித்து எல்லாம் நீயே என பரிபூரண சரணாகதி அடைந்து வாழ்வோமானால் ஆகாமிய கர்மம் நம்மை சேராது.

இப்படி வாழ்வதுதான் வாழ்க்கை! "கர்மாவை செய் பலனை என்னிடம் விட்டுவிடு" என பகவத் கீதையில் கண்ணன் உரைத்ததை சிந்திக்கவும்.

"எல்லாம் அவன் செயல்" என்பதை முழுமையாக உணர்ந்து வாழ்வதே வாழ்க்கை!

"என் செயலாவது யாதொன்றுமில்லை" என முழுமையாக இறைவனிடம் - திருவடியில் சரணடைந்து வாழ்வதுதான் வாழ்க்கை.

"நான் யார்" என்பதை அறிய முற்படுவதே அதற்காக பிரயர்த்தனபடுவதே வாழ்க்கை!

சமுதாயத்தில் ஒவ்வொருவரும் அவரவர் கடமையை செவ்வனே செய்ய வேண்டும். எல்லோரும் சேர்ந்ததுதான் சமுதாயம். பெரியவன் சிறியவன் எல்லாம் கிடையாது.

எல்லாதொழில் செய்பவரும் வேண்டும்! எல்லோரும் எல்லா தொழிலையும் செய்ய முடியாது! எல்லோரும் தத்தம் கடமையை சரிவரச் செய்தாலே நாடு சுபிட்சமடையும், மனித வாழ்க்கை மேம்படும்.

இப்போது நமக்கு கிடைத்த வாழ்க்கை எப்படிபட்டதாயினும் சரி, அதிலுள்ள குறைகளை நிவர்த்தி செய்து சிறப்புடன், அர்ப்பணிப்பு மனபாவத்துடன் வாழ்ந்தால்! யாரும் வாழ்வாங்கு வாழலாம்!

நமக்கு சுதந்திரம் இருக்கிறது என்பதற்காக எதுவும் செய்துவிட முடியுமா? போலீஸ், கோர்ட்டு இதெல்லாம் எதற்கு?

நம் சுதந்திரம் கட்டுப்பாடாக இருக்க வேண்டும். பிறரை துன்புறுத்தாத செயல்களை செய்யத்தான் நமக்கு சுதந்திரம் இருக்கிறது.

நம்மால் ஒரு சிறு உயிருக்கும் எப்போதும் எந்த துன்பமும் வராமல் வாழ்வதுதான் உன்னதமான வாழ்க்கை!

இன்றைய உலகில் எல்லோரும் மனிதநேயம் வேண்டும், மனிதநேயம் உலகம் முழுவதும் இருக்க வேண்டும் என்கிறார்கள்.

இந்திய ஞானிகள் என்றோ இதைவிட மேலாக உபதேசித்துள்ளனர்.

"ஒன்றேகுலம் ஒருவனே தேவன்"
"எல்லா உயிர்களும் இன்புற்று வாழ்க"
"எவ்வுயிரும் தம்முயிர் போல் கருதுக"

இப்படி மனிதநேயத்தைவிட மிக உயர்ந்த ஆன்ம நேயத்தை போதித்தனர்!

மனிதனை மட்டும் நேசிக்க சொல்லவில்லை! எல்லா ஜீவராசிகளையும் உன் உயிர்போல் அன்புகாட்டு என்பதே! சிறந்தது.

உலகுக்கே இந்திய நாடு ஆன்மநேய ஒருமைப்பாட்டை வலியுறுத்துகின்றது. இதுவே இந்தியாவின் பெருமை.

மனம் விரிந்து பரந்து இருக்க வேண்டும். எல்லா ஆத்மாவும் இறை சொரூபந்தான் என்பதை உணர வேண்டும். அதுதான் வாழ்க்கை.

நமது முன்னோர்கள் நம் வாழ்வை எட்டு எட்டு வருடமாக பிரித்து வைத்தனர். முதல் எட்டில் வளர்ச்சி, இரண்டாம் எட்டில் கல்வி, மூன்றாம் எட்டில் திருமணம், நாலாம் எட்டில் பிள்ளைபேறு, ஐந்தாம் எட்டில் சம்பாத்தியம், இப்படியே 8 எட்டாக நம் வாழ்க்கையை பிரிப்பதற்கு காரணம் எட்டில் தான் நம் உயிர் - ஜீவன் - ஆத்மா இருப்பதை உணர வேண்டும் என்பதற்காகத்தான்!

இது நம் அறிவுக்கு எட்ட வேண்டும் என பல்வாறாக உபதேசித்தார்கள்

நாம் அதை எட்டிப் பிடிக்க வேண்டும். அது நம் கருத்துக்குளட்ட வேண்டும் இதுவே வாழ்க்கை.

எண் எட்டில் - எட்டுஎட்டில் - 64 வயதில் கண்டிப்பாக ஒவ்வொருவரும் இறை அனுபவத்தில் திளைக்க வேண்டும் என்பதே நம் ஆன்றோர் வாக்கு.

அதற்குள் உன் கடமைகளை முடித்துவிடு. 60 வயதுக்கு மேல் இறைவனை உணர தவம் செய்வதைத்தவிர வேறு எந்த வேலையும் இருக்கக் கூடாது! இதுவே நமது இந்திய கலாச்சாரம்.

8, எட்டு என நம் ஞானிகள் எல்லோரும் கூறுவது, எட்டும் இரண்டும் என கூறுவது, "எண்ணும் எழுத்தும் கண் எனத்தகும்" என ஔவையார் கூறி விளக்குகிறார்.

"எண்ணென்ப ஏனை எழுத்தென்ப இவ்விரண்டும்
கண்ணென்ப வாழும் உயிர்க்கு"

என திருவள்ளுவரும் இதையே கூறியிருக்கிறார்.

எண்ணும் 8-ம், 2-ம் தமிழ் எண் அ, உ ஆகும்.

எழுத்தாகவும் எண்ணாகவும் உள்ள அ - உ இரண்டும் இரு கண்கள்.

எழுத்துக்கு முதல் அ, உலகத்துக்கு முதல் இறைவன். இதை நமது ஆன்றோர் ஆதிமுதல்வன் இருக்கும் வலது கண்ணை எண்ணில் 8 எழுத்தில் அ என குறிப்பிட்டார். வலது கண் சூரியன் எனவும் விளக்கினர்.

எட்டானது இரண்டாக உள்ளது. இரு கண்களாக உள்ளது. அதற்காக எண்ணில் 2 எழுத்தில் உ என இடது கண்ணை குறிப்பிட்டனர். இடது கண் சந்திரன் என்றனர்.

சூரியனிலிருந்துதானே சந்திரன் ஒளிபெறுகிறது. நமக்கும் அப்படியே.

இன்னும் ஞான ரகசியம்! எட்டு கலைகளையுடைய அக்னியிலிருந்து புறப்பட்டு எட்டு போன்ற இரு கண்களிலும் துலங்குகிறது என்பது ஞான இரகசியம். ∞

இதை அறிந்து வாழ்ந்தால்தான் அந்த ஆத்மா கடைத்தேறும்.

இதை அறிய, உணர, விடுதலை பெற பிறந்ததே இந்த வாழ்க்கை. இது இறைவன் நமக்கு அருளிய கொடை!

நல்ல வாழ்க்கைவாழ நல்லகுணம் எப்படியோ அதுபோல் நல்ல ஆகாரமும் முக்கியம்.

நோயின்றி வாழ நம் சித்தர் பெருமக்கள் உன்னதமான எளிய வழிகளை கூறியிருக்கின்றனர்.

ஞானத்தை கூறிய சித்தர் பெருமக்கள் மனிதகுலம் மட்டுமின்றி ஜீவராசிகள் அனைத்தின் மீதும் இரக்கம் கொண்டதால், ஆன்ம நிலையில் முன்னேறும்போது உடலுக்கு நோய் வந்தால் அதை தீர்க்க மருத்துவமும் கூறியிருக் கின்றனர்.

பிரபஞ்ச நிலையை விளக்கி, இயற்கை தன்மையை விளக்கி காலநிலைக்கொப்ப பக்குவமாக வாழவும் வழிகாட்டியிருக்கிறார்கள்.

என்னே அவர்தம் கருணை!

இன்றைக்கு தண்ணீர் கஷ்டம் ஏற்பட்டு உலகமே திணறுகிறது. 1லிட்டர் தண்ணீர் வாங்குவதைவிட 1லி பால் வாங்கி குடிக்கலாம்! தண்ணீர் விலை எங்குபோகுமோ தெரியவில்லை.

சித்தர்கள் தண்ணீர் எப்படி குடிக்க வேண்டும் என அழகாக கூறுகிறார்கள்.

"நீர் கருக்கி, நெய் உருக்கி, மோர் பெருக்கி உண்பவர் தம் பேருரைக்கில் போமே பிணி".

நீர் கருக்கி என்றால் நீரை நன்றாக கொதிக்க வைக்க வேண்டும். நெய் நன்றாக உருக்கியே பயன் படுத்த வேண்டும். தயிர் சாப்பிடக்கூடாது. எவ்வளவு தண்ணீர் வேண்டுமானாலும் சேர்த்து மோர் ஆக சாப்பிட வேண்டும்.

இப்படி சாப்பிடுபவன் பேரைச் சொன்னாலே போகுமாம் பிணிகள். அப்படியானால் சாப்பிடுபவன் சுபிட்சமாக வாழ்வா னல்லவா! சாப்பிடுங்கள்.

மிக மிக முக்கியமான ஒரு விதி இராமலிங்க சுவாமிகள் கூறுகிறார்.

"மலம் நீர் கட்டாது பார்த்துக்கொள்ளவும்".

ஒரு பொருள் : மலம் தண்ணீராகாது பார்த்துக் கொள்க.

2-ம் பொருள் : மலம் நீங்கள் கட்டியாகாமல் பார்த்துக்கொள்க

3-ம் பொருள் : ஞானப்பொருள்

ஆணவம், கன்மம், மாயை எனும் மும்மலங்களும் கட்டுப்படாது விடுபட்டு நீங்க வேண்டும் என்பதே! ஞானிகள் கூற்றில்தான் எவ்வளவு பொருள்!

"சொல்லிய பாட்டின் பொருள் உணர்ந்து சொல்வார்
செல்வர் சிவபுரத்துள்" என மணிவாசகர் அறிவுறுத்துவதை கவனிக்கவும்! - திருவாசகம்.

"மண்ணில் நல்ல வண்ணம் வாழலாம்"
இறைவா நீயேகதி என வாழ்ந்தால்!

**வாழ்க! வாழ்வாங்கு வாழ வாரீர்!**

* * *



# ஃ யார் குரு

சொல்பவன் குரு! கேட்பவன் சீடன்! தெரியாததை தெரிவிப்பவன் குரு! தெரிந்து தெளிந்து கொள்பவனே சீடன்!

நாம் பிறந்ததிலிருந்து வாழ்நாள் முழுவதும் கற்றுக் கொண்டேதான் இருக்கிறோம்!

கல்விக் கடவுள் சரஸ்வதி தேவியே! இன்னும் கற்றுக் கொண்டுதான் இருக்கிறாளாம்!

கற்றது கைம்மண்ணளவு கல்லாதது உலகளவு என ஞானக்கிழவி ஔவை கூறுகிறாள்!

ஒவ்வொரு விஷயத்தையும் ஒவ்வொருவரிடமிருந்து நாம் கற்கிறோம். எல்லோரும் குருவே!

இயற்கையிலிருந்து, மற்ற ஜீவராசிகளிடமிருந்து எவ்வளவோ விஷயங்கள் கற்றுக்கொள்கிறோம். எல்லோருமே எல்லாமே குருதான்!?

அப்படியானால் குரு என தனித்துச் சொல்ல என்ன காரணம்?

எல்லாரும், எல்லாமும் பல விஷயங்களை நமக்கு அறிவிக்கிறார்கள் அவ்வளவுதான்!

எல்லாவற்றுக்கும் வாழ்க்கையை நெறிப்படுத்த அறிவிப்பதே வேலை, இது குருவல்ல!

யார் நம் அறிவை தூண்டி, நாம் யார்? என அறிய வழிகாட்டி, விழியில் உணர்வை ஊட்டுகிறாரோ அவரே குரு!

ஒப்பற்ற குரு! சத்குரு! ஞானகுரு! நாம்யார் என ஒருவன் உணர வழிகாட்டும் அந்த ஒப்பற்ற குருவை! பெற்றாலே ஒருவன் வாழ்க்கையில் கடைத்தேற முடியும்!

உலக வாழ்வில் சிறப்பாக, நோயின்றி, வாழ்வாங்கு வாழ்ந்து இனி பிறவாமல் இருக்க யார் வழி சொல்கிறாரோ அவரே சத்குரு!

அறியாமையில் உழலும் மனிதன் சிந்தனையை தூண்டி, பிறப்பறுக்க, விழியால் உணர்வூட்டி முன்னேற்றுபவரே ஞானகுரு!

ஒப்பற்ற குருவே சத்குரு! சத்குருவே ஞானகுரு! நாமும் பெற்றால் தான் தப்பித்தோம்! இல்லையேல் மீண்டும் மீண்டும் பிறவிப் பிணிதான்!

மனிதனாக பிறந்த ஒவ்வொருவரும் வளர, வளரத்தான் ஒவ்வொன்றாக அறிந்து கொள்கிறான்.

"எந்த குழந்தையும் நல்ல குழந்தைதான் மண்ணில் பிறக்கையிலே! பின் அவன் நல்லவனாவதும் கெட்டவனாவதும் அன்னை வளர்க்கையிலே! சூழ்நிலையிலே!!

எந்தவொரு சூழ்நிலையில் பிறந்து வளர்ந்தாலும் எல்லோருக்கும் இறைவன் தன்னை உணரும் சந்தர்ப்பத்தை அருள்கிறார்.

அவரவர் கர்ம வினைப்படி எல்லாம் நடந்தாலும், எல்லோருக்கும் இறைவன் அருள்புரிந்து ஞானம்பெற உதவுகிறார்.

இதில் மிகப்பெரிய பங்கு ஞானிகளை சேரும்! இறைநிலை பெற்ற, சாகா வரம்பெற்ற ஞானிகள் இயல்பே அதுதான்!

ஒவ்வொரு ஆன்மாவும் இறைவனை உணர வேண்டும் என்பதற்காக, கர்மவினையால் துன்புறும் நிலைமாற்றி, வழிகாட்டி, கூடவே இருந்து காத்தருள்கிறார்கள்.

நாம் யாரையும் அறிந்திருக்க வேண்டியதில்லை! நம்மை அவர்கள் அறிவார்கள்!?

ஞானிகளுக்கு ஜாதி, மதம், இனம், மொழி, நாடு ஒன்றும் கிடையாது!

"யாதும் ஊரே யாவரும் கேளீர்"!

இதுவே அவர்கள் நிலை!

"என் கடன் பணி செய்து கிடப்பதே!"

எந்தவித பேதமுமின்றி எல்லோருக்கும் வலிந்து வந்து உதவி, காத்து அருள்பவர்கள்தான் ஞானிகள்.

ஒன்றேகுலம்! ஒருவனே தேவன்!

ஒப்பற்ற மேனிலைபெற்ற இந்த மகான்களின் உபதேசப்படி வாழ்பவனே புத்திசாலி! இதை தெரிந்து கொண்டாலே நம் ஆன்மா கடைத்தேறும்!

எண்ணில்லா சித்தர் ஞானிகள் தோன்றியது நம் நாட்டிலேதான்!

இங்கு பிறந்த நாம் அதற்காக பெருமைப்பட வேண்டும்.

கடந்த நூற்றாண்டிலே தமிழகத்தில் அவதரித்து, மரணமிலா பெருவாழ்வு பெற்ற உன்னதமான பேரின்ப நிலையடைந்தவர் திருவருட் பிரகாச வள்ளலார் இராமலிங்க சுவாமிகள்.

இராமலிங்க சுவாமிகளை சத்குருவாக கொண்டுதான் அடியேன் வாழ்கிறேன்.

இராமலிங்க சுவாமிகள் உரைத்த திருவடி ஞானத்தைத் தான் எங்குரு ஜோதி இராமசாமி தேசிகர் எமக்கு உபதேசித்தார், தீட்சை வழங்கினார்.

கடந்த இருபத்தைந்து ஆண்டாக சாதனைகள் செய்து, இராலிங்க சுவாமிகளால் ஆட்கொள்ளப்பட்டு கண்மணியனானேன்!

எமக்கு இராமலிங்க சுவாமிகளை சுட்டிக்காட்டி, உணர்த்திய ஞானசித்தர் திருச்சி ஜோதி இராமசாமி தேசிகர் அவர்கள் சமாதி கொள்ளுமுன் அடியேனை அழைத்து குரு பீடத்தை அளித்தார்கள்.

அடியேனை பக்குவபடுத்தி, முதல் 12 ஆண்டு முடிவில் "கண்மணி மாலை" எழுதி வெளியிட வைத்தார்கள்!

அடுத்த 12-வது ஆண்டிற்குள் என்னை குருபீடத்தில் இருத்தி விட்டார் வள்ளலார்.

"குச்சண்டி - குச்சண்டி" என்று பாபாவும் அருள்வாக்கு கூறினார்.

பாலாவின் கோயிலிலேயே அடியேனை குருவாக அமர வைத்தனர்.

"வலிந்து என்னை ஆட்கொண்டார் வள்ளலார்" இப்போது 5 வருடங்களாக குருவாக அமர்ந்து எல்லா ஞானிகளும் உரைத்த திருவடி ஞானத்தை உபதேசித்து வருகிறேன், தீட்சை வழங்கி வருகிறேன் இறைவன் அருளால்!

"எல்லாம் அவன் செயல்"

"பாட்டுவித்தால் பாடுகிறேன் பணிவித்தால் பணிகிறேன்"

"என் செயலாவது யாதொன்றுமில்லை"

அடியேனை குருவாக இருத்தி, உள் இருந்து தீட்சை வழங்குவதும் அவர்களே!

சென்னையிலும் நெய்வேலியிலும் பலநூறு அன்பர்கள் அடியேனிடம் தீட்சை பெற்றுள்ளனர்.

கன்னியாகுமரிக்கு வந்து அடியேனிடம் தீட்சை பெற்றவர்களும் பலர்.

அடியேன் செய்த புண்ணியம்! ஞானவான்களின் அருள் கிட்டி இன்று ஞானகுருவாக இருக்கிறேன் அவர்கள் இட்ட பணியை செவ்வனே செய்கிறேன். செம்மையாக செய்ய வைப்பதும் அவர்களே!

உலகோரே வாருங்கள்!

உபதேசம் பெறுங்கள்!

தீட்சை பெறுதல் அவசியம்!

அரிதான இப்பிறவி ஆண்டவனை அடையவே! காலந் தாழ்த்தாதீர் கண் திறக்க வாருங்கள்!

குரு யார் என தேர்ந்தெடுப்பதில் பலருக்கும் குழப்பம்.

தன் ஜாதியில் உள்ள சாமியாரை போற்றுகிறது ஒரு கூட்டம்.

தன் மதத்தில் உள்ள சாமியாரை கொண்டாடுகிறது மற்றொரு கூட்டம்.

தன் மொழிபேசும் ஒருவனை பாராட்டுகிறது இன்னொரு கூட்டம்.

சிற்சில காரியங்கள் நடந்ததை வைத்து ஏமாந்து விடுகிறது பிறிதொரு கூட்டம்.

பணத்துக்காக ஒரு கூட்டம்
புகழுக்காக ஒரு கூட்டம்
நோய்நீங்க ஒரு கூட்டம்
பொழுது போக்கவும் ஒரு கூட்டம்

இப்படியாக உலக மாந்தர்கள் அறியாமையால் அங்கங்கே சிக்கி அல்லலுறுகிறார்கள்! ஏமாந்தவர்களை திட்டம் போட்டு ஏமாற்றும் போலிகள்தான் ஏராளமாக இருக்கிறார்கள். இந்நிலை மாற வேண்டும்.

அறியாமையில் உழலும் மக்களை மிருக நிலையில் வாழும் மக்களை திருத்தி மனிதனாக வாழ வைப்பதே ஞானிகளின் ஒரே செயல்.

அதற்கு அவர்கள் குருவை பற்றிக்கொள்ள அறிவுறுத்துகிறார்கள்.

நல்வழி காட்டும் நல்ல ஒரு குரு தேவை.
நன்னெறி நடத்தும் வல்ல ஒரு குரு தேவை.
ஞான குரு வேண்டும்!
இறைவனை உணர்த்தும் குரு வேண்டும்!
எவன் ஒருவன் பேதம் பார்க்கிறானோ
அவன் இறைவனை அடைய முடியாது!
எவன் ஒருவன் தீயபழக்கம் உடையவனோ
அவன் இறைவனை அடைய முடியாது!
எவ்வுயிரும் தம்முயிர்போல் எண்ணுபவன் எவனோ
எல்லாவுயிரும் இன்புற்றிருக்க எண்ணுபவன் எவனோ
எல்லாவுயிரிடத்தும் அன்பு காட்டுபவன் எவனோ
அவனே இறைவனை அடைவான்!
அவனே ஞானவான்!

அரபியில் சொன்னாலும், ஹீப்ருவில் சொன்னாலும், சமஸ்கிருதத்தில் சொன்னாலும் தமிழில் சொன்னாலும் எல்லோராலும் சொல்லப்பட்டது. இறைவனைப் பற்றி மட்டுமே!

மொழியை பார்க்காதீர்கள்!
உபதேச மொழியை பாருங்கள்!?

இனத்தை நாட்டை பார்க்காதீர்கள்!
மனித இனம்தான் என உணருங்கள்!?

ஒவ்வொருவரும், நான் மனிதன்! உலகிலுள்ள அனைவரும் என் சகோதர சகோதரிகள் என என்றைக்கு உணருகிறார்களோ அன்றுதான் உலகம் சுபிட்சமடையும்! மதத்தை பரப்ப நினைக்காதீர்கள்!

மதம் எனும் ஆணவம் கொண்டு அலையாதீர்கள் மனிதனாக பாருங்கள்! மனிதகுலம் தழைக்க பாடுபடுங்கள்! எல்லோரிடமும் அன்பாக இருங்கள்.

இதெல்லாம் வர வேண்டுமானால் அதற்கு ஒவ்வொரு வரும் தன்னை உணர்வதுதான் ஒரே வழி! இறைவனை உணர்வதுதான்!

தனி ஒருவன் மாறினாலே, சமுதாயம் மாறும்! திருடனாக பார்த்து திருந்தாவிட்டால் திருட்டை ஒழிக்க முடியாது.

தனிமனிதன் மாறவே தவஞானிகள் அருள்புரிகிறார்கள். காப்பாற்றுகிறார்கள். நான் நல்லவனாக இருக்க வேண்டும்! என எல்லோரும் எண்ண வேண்டுமே!? இதற்கெல்லாம் தான் குரு வேண்டும்!

உலகுக்கே ஆதி குரு முதல் குரு "ஸ்ரீ தட்சிணா மூர்த்தி"தான்! இதுவே உண்மை!

அதன்பின் தந்தைக்கே உபதேசித்தான் தனயன்!? ஆறுமுகங் கொண்டவன்!

அகத்தியருக்கும் உபதேசித்தான்! அருணகிரிக்கும் உபதேசித்தான்! அழகனே!

இந்த வழிவந்த, வாழையடி வாழையென வந்தவர்தான் வள்ளலார் இராமலிங்க சுவாமிகள்!

இவர்கள் உள் இருந்து உணர்த்த அடியேன் உபதேசம் தீட்சை வழங்குகிறேன். "நான் யார்" என அறியும் அறிவை தந்து, உணர்த்தி நம்மை வழி நடத்துபவரே உண்மை குரு.

வெட்டாத சக்கரம் பேசாத மந்திரம்
வேறொருவர்க்கும் எட்டாத புட்பம்
இனி முடிந்து கட்டாத லிங்கம் கருத்தினுள்ளே
முட்டாத பூசை இறையாத தீர்த்தம்

இதை சொல்லத் தெரிந்தவனே இறைவனை உணர்த்த தகுதியுள்ளவன்! அவனேகுரு! எட்டும் இரண்டும் அறிவிப்பவனே குரு! எட்டோடு இரண்டு சேர்த்து எண்ண வழி சொல்பவனே உண்மை குரு!

இரகசியம் என இருப்பதை தெளிவுபடுத்தி உணர வைப்பவனே குரு!

அடியேன், வள்ளல் பெருமானால் ஏற்படுத்தப்பட்ட சமரச சுத்த சன்மார்க்க சத்திய சங்கம் சென்னை, நெய்வேலி கன்னியாகுமரியில் நிறுவி நாடிவரும் அன்பர்களுக்கு ஞான குருவாக இருந்து ஞானிகள் அருளால் தீட்சை வழங்கி வருகிறேன் வாருங்கள்.

ஆதிகுரு ஸ்ரீ தட்சிணாமூர்த்தியின் உபதேசமே, இறைவனின் உபதேசமே, இதுவரை இவ்வுலகில் தோன்றிய எல்லா ஞானிகளும் உபதேசித்ததையே அடியேனும் உபதேசிக்கிறேன்.

புதிதாக சொல்வதற்கு ஒன்றுமில்லை! வருக! பலன் - ஆன்ம லாபம்!

"தெளிவு குருவின் திருமேனி காண்டல்
தெளிவு குருவின் திருநாமம் செப்பல்
தெளிவு குருவின் திருவார்த்தை கேட்டல்
தெளிவு குருஉரு சிந்தித்தல் தானே"

- **திருமந்திரம்**

* * *

# ரு மறுபிறவி

இந்தப் பிறவியே வேண்டாம் என்கிறோம் மறுபிறவியா? என யோசிக்காதீர்கள்!

இந்த பிறவியோடே பிறவிப்பிணி முடிவுக்கு வரவே மறுபிறவி!?

இங்கு சொல்லப்படும் மறுபிறவி என்பது இந்த பிறவி முடிந்து இனியும் பிறப்பது அல்ல!?

இந்தப் பிறவியே இறுதியாக இருக்க வேண்டும்! அதற்குத்தான் நம் ஞானிகள் வழி கூறுகிறார்கள்!

அது என்ன? எப்படி? பிறந்துவிட்ட நாம் ஞானகுரு ஒருவரைப் பெற்று உபதேசம் பெற்று சூட்சும நிலையில் பிறப்பதே மறுபிறவியாம்!

அதாவது உடலால் பிறந்த நாம், உணர்வால் நம் சூட்சும உடலை பிறப்பிக்க ஒரு குருவை பெற்றேயாக வேண்டும்!

யார் நம்மை, சூட்சும சரீரத்தை பிறப்பிக்கச் செய்கிறாரோ அவரே குரு!

நம் வாழ்வின் பெறும் பேறே இதில்தான் இருக்கிறது. ஞானமடைய இதுவே வழி!

நம் ஸ்தூல தேகத்தை போலவே, நம் உடலினுள் ஒளிவடிவில் சூட்சும தேகம் உள்ளது! முதலில் அதை உணர வேண்டும்!

குருவானவர் தீட்சையின் மூலம் சூட்சும சரீரத்தை பிறப்பிக்கச் செய்கிறார்!

ஸ்தூலதேகத்தில் பிறந்த நாம் சூட்சுமதேகத்தில் பிறப்பதே மறுபிறவி. பிறந்த இப்பிறவியிலேயே மீண்டும் பிறப்பது என்பது இவ்வாறு தான்!

இதை யார் உணருகிறார்களோ அவர்களே ஞானம் பெறுகிறார்கள்.

வேதங்களில் சொல்லப்படுவது "துவிஜன்" இரு பிறப்பாளன் என்பதே.

துவிஜன் யார்? மீண்டும் பிறந்தவன்! பக்திமார்க்கத்தில், பிறந்த குழந்தை 8 வயது பூர்த்தியாகுமுன் உபநயனம் செய்து வைக்கிறார்கள்.

உபநயனம் ஆனவன் துவிஜன்! உலக நடைமுறையில் இன்று இது வெறும் சடங்காகவே இருக்கிறது.

துவிஜன் யார்? எதற்கு உபநயனம்? என உணர்ந்தவர்கள் வெகு சிலரே!

உபநயனத்தின்போது 3 நூல்களை சேர்த்து தோளில் போட்டு, காயத்ரி மந்திரம் உபதேசம் செய்கிறார்கள்.

உபநயனம் ஆனவன் துவிஜன் பிராமணன் என பெருமைப்பட்டு கொள்கிறார்கள்!

இதன் பொருள் தெரியுமா? உபநயனம் என்றால், உப- இரண்டு, நயனம் - கண் என பொருள். அதாவது உபநயனம் என்றால் இரண்டு கண்.

மூன்று நூலை சேர்த்து தோளில் போடுகிறார்கள். ஒரு முடிச்சு அது பிரம்ம முடிச்சு என்றும் சொல்வர் அது என்ன?

மூன்று நூல் சேர்க்க அறுவுறுத்தியது, சூரியன் - சந்திரன் - அக்னி என்ற மூன்று கலைகளையும் இணைக்க வேண்டும். என்பதே!

முடிச்சு உள்ளது அது அவிழ்க்கப்பட வேண்டியதே என்றும் பொருள். ஏன் காயத்திரி மந்திரம்?

காயத்திரி மந்திரம் கூறுவது என்ன? பிராமணர்கள் ஓதும் முக்கியமான காயத்திரி மந்திரம் உருவாக்கியவர் சத்திரியரான விசுவாமித்திர மகரிஷி!

ஒருவன் பிராமணன் ஆகவேண்டுமாயின் அதாவது பிரம்மத்தை உணர்பவனே பிராமணன். பிரம்மத்தை சார்ந்து இருக்க வேண்டுமாயின் சத்திரியரான விசுவாமித்திர மகரிஷி அருளிய காயத்திரி மந்திரத்தை உணர வேண்டும்.

காயத்திரி மந்திரத்தின் பொருள் தெரியாதவன் பிராமணன் அல்ல!?

காயத்திரி மந்திரத்தின் பொருள் உணர்ந்து அதன்படி வாழ்க்கையை அனுஷ்டிப்பவன் எவனோ அவனே பிராமணன்! பிறப்பால் யாரும் பிராமணனல்ல!? பிறப்பில் யாருக்கும் ஜாதி இல்லை! மதம் இல்லை!

பிறந்தபின் ஏதாவதொரு ஜாதி பெயர் சூட்டி இன்ன ஜாதி பெயர் என்கிறார்கள்.

பிறந்த பின் ஞானஸ்தானம் சர்ச்சில் செய்தபின்தான் கிருத்துவன்!

சுன்னத் செய்தவன்தான் மூஸ்லீம்! இப்படியே ஒவ்வொரு வரும் ஒவ்வொரு பழக்க வழக்கத்தை கொண்டிருக்கின்றனர்.

பிறக்கின்ற எந்த குழந்தையும் நிர்வாணமாகவே பிறக்கிறது. ஜாதி, மதம், இனம், மொழி, நாடு ஒன்றுமே குழந்தைக்கு கிடையாது!?

உடல் வளர வளரத்தான் மனிதன் எல்லா பேதங்களுக்கும் உற்றார் பெற்றோரால் உட்படுத்தப்படுகிறான்.

உடல் வளருகிறது. குறுகிய மனோபாவமே உடையவனா கிறான்! அறிவு வளர்வது இல்லையே!? இதை யாராவது உணர்ந்தார்களா?

நிர்வாணமாக பிறந்த குழந்தை வளர்ந்து ஆளாகி அறிவுடையவனாகி பிறப்பறுத்து மகா நிர்வாண நிலையடைய வேண்டும் என்பதுதான் இறைவன் படைப்பு!

நிர்வாணம் என்பது ஆடையை துறப்பது அல்ல! மனதை துறப்பது!?

பிறந்த குழந்தை எந்த பேதமுமின்றி எல்லாம் வல்ல இறைவனை அடைய வழிசொல்ல உபதேசிக்கப்படுவதே உபநயனம்.

நம் வலது கண்ணில் உள்ள சூரிய கலையையும் இடது கண்ணில் உள்ள சந்திர கலையையும் உள்ளே உள்ள அக்னி கலையோடு சேர்க்க வேண்டும்.

இரு கண்களில் உள்ள ஒளிவழி உட்புக வேண்டும். பிரம்மமாகிய பேரொளியை சேர வேண்டும். அதற்காக ஒவ்வொருவரும் உபதேசம் பெறவேண்டும். பிரம்மத்தை சார்ந்தவனே பிராமணன்.

மறுபிறப்பை பற்றி பைபிளில் தெளிவாக கூறப்படுகிறது.

"மறுபடியும் பிறவாதவன் பரலோக ராஜ்ஜியத்தில் பிரவேசிக்க மாட்டான்".

மறுபடியும் பிறந்தால்தான் பரலோக ராஜ்ஜியம்!? எப்படி?

எவன் ஒருவன் அக்னியாலும் பரிசுத்த ஆவியாலும் ஞானஸ்நானம் பெறுகிறானோ? அவனே மறுபடியும் பிறந்தவன்! அவன்தான் பரலோக ராஜ்ஜியத்தை அடைவான்!

அக்னியால் ஞானஸ்நானம் என்பதுதான் அக்னியை பெருக்க வழிகூறும் உபநயனம்!

வெவ்வேறு பாஷையில் சொல்லப்பட்ட ஒரே விஷயம்!

கடவுளை அடைய ஒரே வழி மீண்டும் பிறப்பதே!

துவிஜன் - மறுபடியும் பிறப்பவன்

பிரம்மமாகிய ஒளியை - கடவுளை அடைய - உணர, பிரம்மத்தின் தன்மையாகிய ஒளி நம் கண்களில் துலங்குவதை அறிந்து உணர்ந்து, இரு கண்கள் வழி ஞான தீட்சை பெற்று, அக்னியால் ஞானஸ்தானம் பெற்று, தியானம் செய்வதே மறுபிறவி பெறும் வழி! இறைவன் அருள்வார்.

குரு மூலமாக உபநயனத்தில் தீட்சை பெற்று தவம் செய்தாலே பிறப்பறுக்கலாம்!

"மாற்றிப் பிறக்க வகையறிந்தாயில்லை"
என அகஸ்தியர் கூறுவதும் இதுவே.

பிறந்த இப்பிறவியில் குருமூலம் தீட்சை பெறுவதே மாற்றிப்பிறப்பது ஆகும்!

செத்துப் பிறப்பது நீங்க, மாற்றிப் பிறந்தாலே முடியும்.

இப்பிறவி தப்பினால் எப்பிறவி வாய்க்குமோ? அரிதான இம்மானிட பிறவியில் மீண்டும் பிறக்கின்ற இந்த ஞான நிலையை யார் உணர்கிறார்களோ அவருக்கு மறுபிறவி இல்லை!

அடியேன் இவ்விதம் புதிதாக நிறைய குழந்தைகளை பெற்றுள்ளேன்.

ஞானதீட்சை - திருவடி தீட்சை பெறும் நாளே மீண்டும் பிறந்த நாள். சூட்சும சரீரத்தின் பிறப்பே மறுபிறப்பு, ஒளி பொருந்திய கண்களின் வழியே பேரொளியான இறைவனை தவம் செய்து அடைவதற்காகவே நாம் பிறந்திருக்கிறோம்.

"பற்றற்ற கண்ணே பிறப்பறுக்கும்" கண் எப்படி எதையும் பற்றாமல் இருக்கிறது என்பதை குருமூலம் தீட்சை பெற்று உணர்க!

பற்றற்ற இறைவன் நம் உடலில் பற்றற்ற கண்ணாக துலங்குகிறான்.

நாம் கொண்ட உலக பற்றுக்கள் நீங்க வேண்டும். அதுவே துறவு.

நம்மை கொண்ட கர்ம பற்றுக்கள் நீங்க வேண்டும். அதுவே ஞானம்.

உலக பற்றை விட்டால் நம்மைப் பற்றிய கர்ம பற்றை அறுக்கலாம்!

"பற்றற்ற கண்ணே பிறப்பறுக்கும் மற்று
நிலையாமை காணப்படும்" - குறள்

பிறவிக்கு காரணமே பற்றுகள்தாம்.

பற்றுகளெல்லாம் அற்றுப்போன பிறகுதான் இனிப் பிறவாத நிலை அடைய முடியும். இல்லையானால் மீண்டும்

நிலையற்ற பிறவிதான் வரும். "பற்றில்லாத கண்ணே இறைவன்"

"பற்றுக பற்றற்றான் பற்றினை அப்பற்றைப்
பற்றுக பற்று விடற்கு" - குறள்

பற்றுகளை அறுப்பது மிகவும் கடினம்.

பற்றுகளை விட்டொழிப்பதற்கு பற்றற்றவனாகிய பகவானைப் பற்றிக்கொள்ள வேண்டும். அந்த பற்றை விடாமல் பின்பற்ற வேண்டும்.

பற்றற்றான் ஆகிய இறைவன் எந்த பற்றும் இன்றி பற்றற்றிருக்கும் நம் கண்ணில் மணியில் ஒளியாக உள்ளான்.

ஒளி எதையாவது பற்றினால் என்னாகும்? பற்ற வேண்டிய முறைப்படி பற்றவேண்டும். அதற்கு முதலில் பற்ற வைக்கத் தெரிந்த ஒரு ஞான குருவை சரணடைய வேண்டும். பற்ற வைக்க வேண்டிய முறைப்படி குரு பற்ற வைத்தால்தான் பற்றற்றானை நாம் பற்ற முடியும்!

"பற்றற்றான் பற்றினையே பற்றியிடல் வேண்டும் அது பற்றற்றால் அன்றி பலியாது ...........

- திருவருட்பா

பற்றற்ற இறைவன் நம் உடலில் எந்த பற்றும் இன்றி, எதையும் பற்றாமல் ஒளியாக இருக்கும் துலங்கும் நம் கண்களை நாம் பற்ற வேண்டும்.

உறுதியாக உணர்ந்து நின்று நிலைக்க வேண்டும். அதற்கு நாம் உலகபற்றை விட வேண்டும். அப்போதுதான் இறைவனை பற்ற முடியும் என்கிறார் வள்ளலார்.

நம் பற்றை விட்டால்! பற்றற்ற இறைவனை பற்றினால்! உடலால் பிறந்த இப்பிறவியிலேயே உணர்வால் சூட்சும சரீரத்தை ஞானகுரு கடாட்சத்தால் பிறப்பிக்கச் செய்து தவம் செய்தால்! பிறந்து-இறந்து-பிறந்து வாழும் நிலையிலிருந்து விடுபடலாம்! வீடுபேறு அடையலாம்! வருக!

"பிறப்பென்னும் பேதைமை நீங்கச் சிறப்பென்னும்
செம்பொருள் காண்பது அறிவு" - குறள்

பிறப்பு என்னும் அறியாமை நீங்க வேண்டுமென்ற நோக்கத்தோடு நாம் அறிந்த பொருள்கள் எல்லாவற்றிலும் சிறந்ததும், குற்றமற்றுச் செம்மையானதுமான பொருள் நமது கண்கள் தான் என்று கண்டறியும் அறிவுதான் மெய்யுணரும் அறிவு.

"உறங்குவது போலும் சாக்காடு உறங்கி
விழிப்பது போலும் பிறப்பு" - குறள்

உடல் அழிந்தாலும் உயிர் அழிவதில்லை; அதனால் மரணம் என்பது உயிருக்கு உறங்குவதைப் போன்றது. அந்த உயிர் வேறோர் உடலில் மீண்டும் பிறப்பது உறங்கி விழிப்பது போன்றது.

பிறப்பை பேதமை என்கிறார். அறிவில்லாதவனே பிறந்து பிறந்து சாகிறான் பிறப்பறுக்க முயல்க!

அழியாதது உயிர்! கடவுள் அம்சம்! அழிவது உடல் மட்டுமே!

உடலை அழியாத தன்மைக்கு மாற்றுவோமானால்! உயிர் உடலை விட்டு ஒருபோதும் பிரியாது!

அதற்குத்தான் ஞானிகள் வழி-விழி காட்டி உணர்த்துகிறார்கள்!?

உயிர் உறங்கி விழிக்கின்ற - அதாவது செத்து பிறக்கின்ற உடலில் இருந்து பிரிந்து வருகின்ற நிலைமாற வேண்டும்.

உயிர் உறங்கி விழிக்கின்ற நிலைமாற, நாம் தூங்காமல் தூங்க வேண்டும்! "தூங்காமல் தூங்கி சுகம் பெறுவது எக்காலம்" என ஞானிகள் இந்நிலையைத்தான் நமக்கு அறிவுறுத்துகின்றனர்.

தூங்காமல் தூங்குவது என்பது அறிதுயில்!? உணர்வோடு இருப்பது.

பிணம்போல் தூங்குபவன் பிறிதொரு நாள் பிணமாகி விடுவான். உணர்வு அற்றுப்போனால், உயிர் உடலைவிட்டு போய்விடும்.

நம் உடலில் கண்களில் ஜோதியாக விளங்கும் நம் உயிரை - இறைவனை - எண்ணி எண்ணி உணர்ந்து உணர்ந்து தூங்காமல் இருந்து தவம் செய்வதே மாபெரும் சாதனை!

புற உணர்வு அற்று மெய் உணர்வுடன் தூங்காமல் லயிப்பதே தவம். அதில் கிடைப்பதே ஆன்மலயம்!

தூங்காமல் தூங்க குரு வழிகாட்டணும். நம்முள் இருக்கும் நாயகன் அருள் பாலிப்பார்!

* * *



வள்ளலார்



இராமானுஜர்

# உபதேசம்

"எப்பொருள் எத்தன்மைத் தாயினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்பது அறிவு". - குறள்

மெய்ப்பொருளை ஆராய்வது எப்படி என்றால் எந்த பொருள் எப்படி நமக்கு காணப்படினும் அந்தப் பொருளில் எந்தப் பகுதி அழிவில்லாமல் என்றும் இருக்கும் என்று கண்டறிவதே மெய்ப் பொருளை ஆராய்ந்து அறியும் அறிவு.

நமது உடலில் அழியாதது உயிர். அது இருப்பது - துலங்குவது நம் உடலில் பற்றற்று இருக்கும் கண்களில் - ஜோதியாக! இதுவே நம் மெய்யாகிய உடலில் உள்ள உண்மை பொருள்.

"எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு" - குறள்

எந்தப் பொருளைப் பற்றி யாரார் எப்படியெல்லாம் சொன்னாலும் அவற்றையெல்லாம் கேட்டு அவற்றுள் எது உண்மை என்று கண்டுகொள்ளச் செய்வதுதான் அறிவு.

யாரார் ஏதேது சொன்னாலும் அதையெல்லாம் நம் உடலில் உள்ள ஒளிபொருந்திய கண்களாக - மெய்ப்பொருளாக காண்பவனுக்குத்தான் அறிவு இருக்கின்றது என்று பொருள்.

"கற்றீண்டு மெய்பொருள் கண்டார் தலைப்படுவர்
மற்றீண்டு வாரா நெறி" - குறள்.

இந்தமுறையில் ஆராய்ந்து அறியக் கற்றுக்கொண்டு புறத்திலே மெய்ப்பொருளை தேடியலையாமல்; நம் உடலாகிய மெய்யில் உள்ள பொருளாகிய கண்களை மெய்பொருள் என உணர்ந்து கண்டு அறியக்கூடியவர்கள் மறுபடியும் இங்கே பிறவாதிருக்கும் மார்க்கத்தை அடைவார்கள். அதாவது பிறவிப் பிணியிலிருந்து மீள்வர்.

மனிதனாக பிறந்த நாம் பிறப்பு - இறப்பிலிருந்து விடுபட முதலில் மெய்ப்பொருளை உணர்த்தும் ஞானகுரு

பாதம் பணிந்து உபதேசம் தீட்சை பெற்று வாழ்வாங்கு வாழ வேண்டும்.

நல்ஒழுக்கங்களை கடைபிடிக்க வேண்டும். நல்ல நெறியோடு வாழவேண்டும்.

சுத்த சைவ உணவு உட்கொண்டு சதாகாலமும் இறை சிந்தையோடு வாழ வேண்டும்.

நாம் பிறந்தது இனி பிறவாமல் இருக்க! மெய்பொருள் அறிவதுதான் அறிவுடைமை! மெய்பொருள் உணர்வதுதான் ஞானம்!

மெய்யானது நம் உடல்!? ஏனெனில் அழிவில்லாத உயிர் இருக்கிறதல்லவா?

நம் முன்னோர் உரைத்த நெறிப்படி வாழ்வோமானால் நம் உடல் அழியாத தன்மை பெறலாம்! அழியாத தன்மையை உடலும் பெறமுடியும் அதனால்தான் முன்னோர் உடலை "மெய்" என்றனர்.

மெய் உணராத அறிவிலிகள் பொய்யான உலகத்திலே உழன்று தானும் பொய்யாகி விடுகிறான்; அழிந்து விடுகிறான். மெய்யிலேயே மெய்ப்பொருள் உணர்வதே சிறப்பு!

மனிதனாக பிறந்த நாம் தானதவம் செய்து முக்திபெற வேண்டும்.

மெய்பொருள் உணர்ந்து தவம் செய்ய வேண்டும். மெய்ப் பொருளை எல்லோருக்கும் அறிவிக்க ஞான தானம் செய்ய வேண்டும்.

தானங்களில் சிறந்தது அன்னதானம் என்பர்?! அதைவிட சிறந்த தானம் ஞானதானம்!

ஒருவேளை வயிற்றுப் பசியை போக்கும் அன்னதானத்தை விட, பிறந்து செத்து துன்புறும் ஒரு ஆன்மா விடுதலை பெற வழிகாட்டும் ஞானதானமே மிக மிக உயர்ந்தது! ஒப்பற்றது!

"அன்ன சத்திரம் ஆயிரங்கட்டலை விட ஆங்கோர் ஏழைக்கு எழுத்தறிவித்தல் நன்று"

1000 பேருக்கு அன்னதானம் வழங்கும் ஒரு சத்திரம்; ஆயிரம் சத்திரங்கள் கட்டி பல்லாயிரக்கணக்கானவர்களுக்கு அன்னதானம் கொடுப்பதை விட ஒருவருக்கு எழுத்தறி வித்தல் நன்று! அதாவது எண்ணும் எழுத்தும் கண்ணென தகும் என்றார்களே அந்த மெய் எழுத்து அறிவிப்பதே நன்று மிகவும் உயர்ந்தது.

"எழுத்தறிவித்தவன் இறைவனாகும்"

அப்படிப்பட்ட மெய் எழுத்து நம் மெய்யாகிய உடலில் நம் கண்கள் என்பதை அறிவுபூர்வமாக, உணர்வுபூர்வமாக எடுத்துரைத்து உணர்த்தி காட்டுபவனே இறைவன்!? ஞானகுரு!?

குரு உபதேசம் பெற்றாலே மோட்சம்!

உப என்றால் இரண்டு. தேசம் என்றால் இடம். உபதேசம் என்றால் இரண்டு இடம்.

நம் உடலில் உள்ள இரண்டு இடம் இரண்டு கண்கள். இரண்டு கண்ணும் ஒரே மாதரிதான் உள்ளது.

நம் உடலில் வேறு எதுவும் ஒன்றுபோல் மற்றொன்றில்லை!

நம் இரண்டு கண்கள் மட்டுமல்ல, இந்த உலகிலுள்ள 700 கோடி மக்களின் கண்களும் - கண்மணியும் ஒன்று போலவே உள்ளது. எவ்வித வித்தியாசமுமில்லை!

நம் அனைவரிடமும் - மனிதர்களாகிய உலகமக்கள் அனைவரிடமும் இறைவன் கண்மணியாக அதில் விளங்கும் ஜோதியாக ஒன்றுபோலவே இருக்கின்றான்!?

"ஒத்த தறிவான் உயிர்வாழ்வான் மற்றையான்
செத்தாருள் வைக்கப்படும்" - குறள்

**உலகிலுள்ள 700 கோடி மக்களிடமும் ஒத்து இருக்கின்ற - ஒன்றுபோல் இருக்கின்ற - எவ்வித வித்தியாசமுமின்றி இருக்கின்ற ஒரே பொருள் கண்மணிதான்!?**

அதை அறிந்தவன், உணர்ந்தவன் உயிர் வாழும், பிரிந்து போகாது மரணம் அடைய மாட்டான்.

கண்மணியில் காரியப்படும் ஒளியான இறைவனை உணராதவன் செத்துப் போவான்! இதுவே ஞானிகளின் சத்திய வாக்கு!

எண்சாண் உடம்புக்கு சிரசே பிரதானம். நம் சிரசில் - தலையில் உள்ள முக்கியமான உறுப்பு கண்கள்! தலைக்கு தலையாயது கண்ணே.!

ஒரு தாயின் கருவில் முதன்முதலாக உருவாவது கண்மணி.!

நாம் பிறந்தது முதல் 100 வயதுவரை நம் உடலில் வளர்ச்சியடையாத முதிர்ச்சியடையாத ஒரே உறுப்பு கண்மணி.!

உலகமக்கள் அனைவருக்கும் ஒரே அளவில் உள்ளது கண்மணி.!

நம் உடலில் இரத்தம் இல்லாதது; எலும்பு இல்லாதது; நரம்பு இல்லாதது; உடலில் ஒட்டாமல் இருப்பது கண்மணி.!

உலகமே பஞ்ச பூதங்களால் ஆனது. நம் உடலும் பஞ்ச பூதத்தால் ஆனது. நம் உடலில் கண்களில்தான் பஞ்சபூதமும் உள்ளது!

கண்தானம் செய்கிறார்கள் அல்லவா? யார் கண்ணையும் யாருக்கும் பொருத்தலாமல்லவா? இதிலிருந்து என்ன தெரிகிறது?

கண்களில் சிறியவர் கண், பெரியவர் கண் என்ற பேதமில்லை, உலகிலுள்ள எல்லோர் கண்ணும் ஒரேமாதிரி தான்!? எனவேதான் யார் கண்ணை வேண்டுமானாலும் யாருக்கு வேண்டுமானாலும் தானம் செய்யலாம்!? கண்ணுக்கு எந்த வித்தியாசமுமில்லை!?

எந்தவித வித்தியாசமுமில்லாத அந்த கண்ணில் தான்; இறைவனும் எந்தவித பேதமுமின்றி உலகோர் எல்லோரிடத்தும் ஒரேமாதிரி இருக்கின்றான்!?

ஒரேமாதிரி இருக்கின்ற அந்த இறைவன்தான் - ஒளி தான் நமக்கு தாயும் தந்தையுமாவான்!

ஒரே இறைவன்தான்! பேரொளி தான்! நம் தாயும் தந்தையுமானவன் தான்! நாம் அறிய வேண்டியது! எப்படி என உணர வேண்டியது!

நாம் எல்லோரும் - உலகமக்களாகிய 700 கோடி மக்களாகிய நாம் அனைவரும் அந்த ஒரே அம்மையப்பனின் பிள்ளைகளே!

அப்படியாயின் உலகமக்களாகிய நாம், 700 கோடி பேர்களும் சகோதரசகோதரிகள் தானே!?

பேரொளியாகிய - அருட்பெருஞ்ஜோதியாகிய நம் அம்மையப்பனாகிய அந்த இறைவன்தான் சின்ன ஒளியாக நம் அனைவரின் கண்மணியிலும் ஒளிர்கிறார்!? எவ்வித வித்தியாசமுமின்றியே

நம் அம்மையப்பனை நாம் காண வேண்டாமா? உணர வேண்டாமா?!

எல்லாம் வல்ல இறைவன், எங்கும் நிறைந்த இறைவன், அணுவுக்குள்ளும் அணுவாக இருப்பவன் நம் உடலில் இல்லாமலிருப்பானா?

நம் உடலில் கண்ணில் மணியாக ஒளியாக இருக்கிறான். இந்த உலகிலுள்ள எல்லா ஞானிகளும் இதைத்தான் கூறியிருக்கிறார்கள்.

கண்தான் வெட்டாத சக்கரம்! கண்தான் பேசாதமந்திரம்! கண்தான் வேறொருவர்க்கும் எட்டாத புஷ்பம்! கண்தான் கட்டாத லிங்கம்! சிவலிங்கத்தை மேலிருந்து பார்த்தால் 3 வட்டம்தானே தெரிகிறது, கண் அதுபோலத்தானே உள்ளது.

கண்தான் கருப்பு - கரும் - பூ! உலகில் எவ்வளவோ கலர்களில் பூக்கள் இருக்கின்றனவே, கருப்பு பூ உண்டா? கண்தான் கருப்பு பூ!

அண்டம்போல் அழகியது கண்! அண்டம் என்றால் உலகம் - பூமி நாமிருக்கும் பூமி உருண்டையாக இருப்பது போலவே நம் கண்மணி உள்ளது!

பூமி தன்னைத் தானே சுற்றுவதுபோல கண்மணியும் சுற்றுகிறது!

பூமி சுழல்வதற்கு ஆதாரம் அதன் உள் மத்தியில் கனன்று கொண்டிருக்கும் நெருப்புதான்.

கண்மணியும் அதன் மத்தியில் உள்ள, ஊசிமுனை துவாரத்தினுள் உள்ள சிறு ஜோதியால்தான் சுழல்கிறது!

பூமி எப்படி அந்தரத்தில் உள்ளதோ அதுபோலவே கண்மணியும் கண்ணின் கரு விழிக்குள் பிராண நீரில் மிதந்து கொண்டுதான் இருக்கிறது!

"பிராண நீரானதில் உருண்டு திரண்டதை கண்டு அறிந்திடு நீ"

என சித்தர் உரைத்தது கண்மணியைத்தான்!

"காளத்தியான் அவன் என் கண்ணில் உள்ளான் காண்"

என திருநாவுக்கரசர் உரைத்ததை உணர்வீர்.

"மணியே மணியின் ஒளியே ஒளிரும் மணிபுனைந்த
அணியே அணியும் அணிக் கழகே அணுகாதவர்க்கு
பிணியே பிணிக்குமருந்தே அமரர் பெருவிருந்தே
பணியே னொருவரைநின் பத்மபாதம் பணிந்தபின்னே"

அபிராமிபட்டர் அடியேனுக்கு உரைத்த அபிராமி அந்தாதி பாடல் இது! ஆசி வழங்கி அருள் பாலித்தார் பட்டர் பெருமான்!

மணியே என்பதற்கு இதுவரை உரை எழுதிய யாரும் சரியாக சொல்லவில்லை! மணியே என்றால் மாணிக்கமே என்றே பொருள் சொல்லியிருக்கின்றனர். அப்படியல்ல!

மணியே - கண்மணியே, மணியின் ஒளியே கண்மணியிலுள்ள ஒளியே, ஒளிரும் மணிபுனைந்த அணியே - ஒளிபொருந்திய மணியை உடைய கண்ணே, அணியும் அணிக்கழகே - கண்ணுக்கு அழகே, அதிலுள்ள மணியின் ஒளியே, அணுகாதவர்க்கு பிணியே - கண்மணி ஒளியை அணுகாதவர்களுக்கு பிறவிப் பிணியே, பிணிக்கு மருந்தே

- பிறவியாகிய பிணிதீர மருந்து கண்மணி ஒளியே, அமரர் பெரு விருந்தே - தேவர்களுக்கும் பெரிய விருந்தே இதுதான், பணியேன் ஒருவரை நின் பத்மபாதம் பணிந்த பின்னே -கண்மணி ஒளியே இறைவனின் தாமரை திருவடி என்பது அதை பணிந்த நான் வேறொருவரை பணியேன் என்பதே இதன் பொருள்

இதுவே ஞானப்பொருள். இந்த ஒரு பாடல்போதும் ஞானம் பெறுவதற்கு! அபிராமிபட்டர் பிணிக்கு மருந்தே என நம் பிறவிப்பிணி தீர நம் கண்மணியிலுள்ள ஒளிதான் மருந்து என்றார். இதையேதான் வள்ளலாரும் நல்ல மருந்து இம்மருந்து சுகம் நல்கும் வைத்தியநாத மருந்து, அருள்வடிவான மருந்து அருட்பெருஞ்ஜோதி மருந்து என்றார்.

அபிராமிபட்டர் இறைவன் திருவடிகளை பணிந்தபின் வேறொருவரை பணியமாட்டேன் என்றார். இதையே திருநாவுக்கரசரும் நாமார்க்கும் குடியல்லோம் நமனை அஞ்சோம் நரகத்தில் இடர்படோம் என்று உறுதிபட கூறுகிறார்.

ஞானிகள் எல்லோர் கூற்றும் ஒன்றுதான்! நாம் ஞானம் பெற எல்லோரும் ஒன்றைத்தான் சொன்னார்கள்! நன்றைத் தான் சொன்னார்கள்!

"கண்ணனின் மணியை கருத்தின் தெளிவை
விண்ணில் நின்று விளங்கும் மெய்யினை
எண்ணி எண்ணி இரவும் பகலுமே
நண்ணு கின்றவர் நாந்தொழுந் தெய்வமே"

தாயுமான சுவாமிகள் உரைத்த ஞானம்! இறைவனை, கண்ணின் மணியில் ஒளியாக இருப்பதை, எல்லாம் வல்ல இறைவனே விண்ணில் இருக்கும் மெய்யானவரே அது என்பதை, கருத்தில் இருத்தி இரவு பகலாக எப்போதும் எண்ணி எண்ணி தவம் செய்பவரே நான் கும்பிடும் கடவுள் என உரைக்கிறார் தாயுமான சுவாமிகள்.

இதுதான் உன்னதமான ஒப்பற்ற ஞானவழி! எல்லா ஞானிகள் கூற்றும் இதுவே!

"தேவன் ஒளியாய் இருக்கிறார் நீங்களும் ஒளியிலே நடந்தால் தேவனை தரிசிக்கலாம்" இது பைபிள் வாசகம்.

"கண்ணே சரீரத்தின் விளக்காக இருக்கின்றது. உன் கண் ஒளியுள்ளதாக இருந்தால் உன் சரீரம் முழுமைக்கும் ஒளியாயிருக்கும்." இயேசு கிருஸ்துவின் உபதேசம் இது.

பேரொளியாகிய தேவனை அடைய, நம் கண்ணில் உள்ள சிறு ஒளியை பெருக்கி முதலில் நம் உடல் முழுவதும் ஒளியாக வேண்டும். அதுவே நாம் ஒளியிலே நடப்பது.

ஊன உடல் ஒளி உடலாக மாறினால்தான் ஒளியான தேவனை அடையலாம்!

ஊன உடல் ஒளியுடலாக பெற அக்னியினால் ஞானஸ்தானம் பெற வேண்டும்.

இப்படித்தான் வள்ளலார் தன் உடலின் ஒளியை பெருக்கி ஊன உடலை ஒளியாக்கி ஒளியுடல் பெற்று அருட்பெருஞ் ஜோதி மயமானார்! மரணமிலா வாழ்வு பெற்றார்.

இயேசு கொடுத்த அக்னியினாலான ஞானஸ்நானமே இங்கு அடியேன் கொடுக்கும் மெய்ப்பொருள் தீட்சை! திருவடி தீட்சை.

உலகிலுள்ள எல்லா ஞானிகளும் இதைத்தான் இப்படித் தான் உரைத்தார்கள்!

முகமது நபிக்கு அல்லா காட்சி கொடுத்ததும் ஒளியாகத் தானே!

எல்லோராலும் எப்போதும் ஒப்புக்கொள்ளப்பட்ட இறைநிலை" ஒளிதான்!"

அந்த ஒளிதான் அந்த இறைவன்தான் நம் கண்மணி யிலும் ஒளியாக துலங்குகிறான்? நாம் அவனை உணர்ந்து தவம்செய்து ஞானம்பெற வேண்டும்! பெறலாம்!

வேதங்களில் சொல்லப்பட்டதும் இதுவே! கடோபநிஷத்தில் நசிகேதனின் கேள்விக்கு எமனின் பதில், இறைவன் நம் உடலில் கட்டை விரல் அளவிலான இடத்தில் புகையில்லா ஜோதியாக விளங்குகிறான் என்பதே!?

இதைச்சொல்லி விளக்க குருவில்லாமல் முடியுமா? இதுபோல பலவிதங்களிலும் பல நூல்களிலும் ஞானம் உரைக்கப்பட்டுள்ளது.

நம் கையில் ஆள்காட்டி விரலால் கட்டை விரலின் மத்தியை தொட்டு, மற்ற மூன்று விரல்களை நீட்டி இருப்பதை சின்முத்திரை என்பர்.

சின் முத்திரை வைக்கும்போது ஆள்காட்டிவிரல் கட்டை விரலின் மத்தியில் தொடும் இடத்திற்கு மேல், அதாவது பெருவிரல் - கட்டை விரலின் நுனியிலிருந்து நடுவில் உள்ள கோடுவரை உள்ள இடத்தின் அளவே நம் கண் அளவு! வைத்துப் பாருங்கள்.

இறைவன் கட்டைவிரல் அளவிலான கண்ணில் புகையில்லாத ஜோதியாக விளங்குகிறான்! புறத்திலே நாம் ஏற்றும் ஜோதி புகை உள்ளது. அகத்திலே உள்ள ஜோதி ஆத்ம ஜோதி புகையில்லாதது! அருட்பெருஞ்ஜோதி!

புருவ மத்தியில் இறைவன் விளங்குகிறார் என்கிறார்கள். புருவமத்தி எது என தெரியாமல் குழம்பி விடுகின்றனர், இதுபோல பலப்பல பரிபாஷைகளில் இறைவன் நம் கண்ணில் மணியாக ஒளியாக இருப்பதை உரைக்கிறார்கள்.

"புருமத்தி ஏதென்றக்கால் பரப்பிரம்ம மானதொரு அண்ட உச்சி" சித்தர் வாக்கு.

பரப்பிரம்மம் ஆகிய ஒளியாகிய அண்ட உச்சி. அண்டம் போல் அழகியதாம் என பட்டினத்தார் பாடல் உரைக்கிறது. அண்டம்போல் உள்ளது கண்மணி. அதன் உச்சி என்பது மத்திய பகுதி.

புருமத்தி எது எனில் கண்மணியின் ஒளிபொருந்திய மத்திய பகுதி.

இதை உணர்ந்தால்தான் ஞானம்!? நம் நெற்றியில் இரு புருவங்களுக்கு இடைப்பட்ட ஆக்ஞை சக்கர இடமல்ல!?

"கையறவிலாத நடுகண் புருவ பூட்டு"

என வள்ளலார் உரைத்ததையும் காண்க!

குண்டலனி சக்தி எழ வேண்டும் என்கின்றனர். குண்டலனி சக்தி அடிவயிற்றில் என்கின்றனர் அறிவிலிகள்! அது ஆறு ஆதாரங்களில் ஒரு ஆதாரம் யோக மார்க்கம்.

ஞானிகள் கூறியது இதுதான்! குண்டுபோல் பூமிபோல் உள்ளது கண்மணி! அதில் அனல் - தீ உள்ளது! அது தான் நீ - ஆத்மா - இறையம்சம்!

நம் உடலில் குண்டுபோல் இருக்கும் கண்மணியில் இருக்கும் அனல்தான் நீ! அந்த சக்தியை எழுப்பு என்பதே.

குண்டு + அனல் + நீ = குண்டலனி இதைச் சொல்லி உணர்த்துவதே உபதேசம்!

எல்லாம் வல்ல எங்கும் நிறைந்த அணுவுக்கும் அணுவான அந்த பெருஞ்ஜோதியாகிய இறைவன் நம் உடலில் கண்மணியின் மத்தியில் சிறு ஜோதியாக விளங்குகின்றான்!

இதுவே ஞான உபதேசம்! இதை உபதேசிப்பவனே ஞானகுரு! இதை உணர்த்துபவனே சற்குரு!

**உபதேசம் பெற வாருங்கள்!**
**உங்களை உணர வாருங்கள்!**
**ஒளிபெற வாருங்கள்!**

* * *


**அரவிந்த்**
ஒசூர்


**குமரேசன்**
ஒசூர்


**பத்மநாபன்**
ஒசூர்


**லோகநாதன்**
ஒசூர்

# எ தீட்சை

ஒரு மனிதன் எப்போது மனிதனாகிறான்? மாதா, பிதாவை பெற்றவன் மனிதனல்ல!?

குருவை பெற்றவன்தான் மனிதனாகிறான்! உருவத்தால் மனிதனானவன் உள்ளத்தாலும் பண்பட்டு உண்மையிலேயே மனிதனாவது ஒரு ஞான குருவை பெற்ற பின்னரே!

மாதா பிதாவை காட்ட! பிதா குருவை காட்ட வேண்டும்! குருதான் இறைவனை காட்டமுடியும்!

பழைய காலங்களில் சிறுவனாயிருக்கும்போதே எல்லோரையும் குருகுலத்தில் சேர்த்துவிடுவர். அங்குதான் அவனுக்கு எல்லாம் போதிக்கப்படுகிறது.

உலகில் வாழவும் இறைவனை உணர்த்தியும், ஒருவனை முழு மனிதனாக மாற்றி விடுவது குருகுல வாழ்க்கையே!

இன்றைய கல்வி வெறும் ஏட்டுச்சுரைக்காயாகவே உள்ளது.

மாணவர்கள் மனனம் செய்து மதிப்பெண்களை பெறுகிறார்கள்?! யாரும் புரிந்துகொள்வதில்லை!

இன்றைய பெற்றோரும் தன்பிள்ளை அதிகம் சம்பாதிக்க எந்த கல்வி படிக்கணுமோ அதில்தான் சேர்த்து விடுகிறார்கள்.

பணம் பணம் என அலைகிறார்கள். முடிவில் பிணமாகித் தான் போகிறார்கள்!

கம்பியூட்டர் மோகம் எல்லோரையும் பிடித்து ஆட்டுகிறது. கை நிறைய சம்பாதிக்கிறார்கள். சிறிது நாளிலேயே இயந்திரமாகி விடுகிறார்கள். வாழ்வில் நிம்மதியில்லை!

அமைதி இல்லை - ஓய்வில்லை என்று அதைதேடி மது, மாது என போதைக்கும் கேளிக்கைக்கும் அடிமையாகிறார்கள். முடிவில் அழிந்துதான் போகிறார்கள்.

"நம் மதி கெட்டவர்களுக்குத்தான் நிம்மதி இருக்காது"! தடுமாறுவர்! தறுதலையாக திரிவர்!

இது எது போலென்றால் புதையலைத் தேடிப் போய் காடியிடம் மாட்டிக்கொண்ட கதைதான்!?

ஒழுக்கமில்லாதவன் சேர்க்கும் பணம் நிலைப்பதில்லை! பணம் அல்ல வாழ்க்கை!

அடிப்படை கோளாறு ஆரம்பக் கல்வியிலேயே! ஒழுக்கம் கற்பிக்கப்படுவதில்லையே!

மனித வாழ்க்கை ஒழுக்கம் என்னும் அஸ்திவாரத்தின் மேல் எழுப்பப்படுவதே!?

"ஒழுக்கம் விழுப்பம் தரலான் ஒழுக்கம்
உயிரினும் ஓம்பப்படும்"

- குறள்

ஒருவனுக்கு மேன்மையுண்டாக்குவது நல்ல நடத்தைதான். அதனால் நல்ல நடத்தையை உயிரைவிடச் சிறந்ததாகப் பாதுகாக்க வேண்டும். ஒழுக்கம் இல்லாதவன் மனிதனல்ல! மிருகம்?!

"கல்தோன்றி மண் தோன்றா காலத்து முன் தோன்றிய மூத்த தமிழ்" என்று உலகோரால் போற்றப்படும் நம் தாய் மொழியாம் தமிழில் எத்தனையோ ஞானநூற்கள் நீதி நூற்கள் உள்ளனவே!? படிப்பது யார்?

இன்றைய உலகில் பழைமையான மொழி தமிழ்! இங்கு இது சிறப்படைய காரணம் ஒழுக்கத்தை, நீதிநெறி தவறாத நல்ல வாழ்க்கையை அறிவுறுத்தியதுதான்.

உலகமக்கள் அனைவருக்கும் பொதுவான கலாச்சாரம். வாழ்க்கைமுறை இங்கு வழங்கப்பட்டதால் தான்!

இதுதான் சனாதன தர்மம்!
இதுவே உன்னதமான கலாச்சாரம்!
இதுவே மனிதன் மனிதனாக வாழ வழிகாட்டியது!

"ஐந்து கண்டம் அளாவிய தமிழ்" என திருமூலர் குறிப்பிடுகிறார் என்றால் பழங்காலத்தில் உலகில் இருந்த

5 கண்டங்களிலும் தமிழ் தமிழர் கலாச்சாரம் - சனாதன தர்மமே தழைத்தோங்கியிருந்தது என்பதை உணரலாமல்லவா?!

மனிதன் பிறப்பு இறப்பு வாழ்க்கை நிலைகளை பார்த்தோமல்லவா? இந்த வாழ்வு முழுமைபெறுவது நாம் பெறும் "வீடுபேறில்" தான் இருக்கிறது. அறிந்தோமல்லவா?!

அதற்கு வழி ஒழுக்கம் - பின் குரு வழி உபதேசம் தீட்சை பெற்று நம் வாழ்வை மேம்படுத்துவதுதான்!

தவ வாழ்க்கையே தன்னை உணரும் வழி! பிறப்பு இறப்புக்கு காரணமான வினைகளை வேரறுக்க, ஒளியாகிய நம் உயிரைப் பற்றி நின்றாலே முடியும்!

**"சிவத்தைப் பேணல் தவத்திற்கு அழகு"**

ஔவையார் கூறியது, சிவமாகிய ஒளியை பேணி பெருக்குவதே தவம் என்பதே!

**சக்கர நெறிநில் :**

ஔவையார் கூறியது சக்கரம்போல் உள்ள கண்மணி யைப் பற்றித்தான்! "வெட்டாத சக்கரம்" என இன்னொரு ஞானி கூறியதும் இதைத்தான்!

கண்மணியை - அதில் உள்ள ஒளியை பற்றி அந்த நெறிப்படி வாழ் என்பதே பொருள்!

**மோனம் என்பது ஞானவரம்பு :**

மோனம் என்றால் மௌனம். மௌனமாக இருப்பதே ஞானிகள் செயல். மௌனமாக இருப்பது என்பது வாய் பேசாமல் இருப்பதல்ல!

மௌனமாக இருக்கும் கண்மணியை குறிப்பதாகும். "கண்டவர் விண்டிலர் விண்டவர் கண்டிலர்" என சொல்லப் படுவது இதுதான்.

காணுகின்ற கண்தான் கண்டவர் அது பேசாது. மௌனமாகவே உள்ளது. விண்டவர் என்பது பேசுபவர் வாய் தான். விண்டிடும் வாய் பார்க்க முடியாது.

காணும் கண்ணே மௌனம்- மோனம். மோனமாகிய கண்ணில் நிற்பதே ஞானம்.

**"ஒத்த இடத்து நித்திரைகொள்"**

முதுகுவலி கழுத்துவலி உடல் வலியால் அவதிப்படும் நோயாளிகளுக்கு இன்றைய டாக்டர்கள் சமதரையில் தலையணை இன்றி படுத்து உறங்க சொல்கிறார்கள். இது உடலுக்கு ஆரோக்கியம்.

ஒத்த இடம் - ஒன்றுபோல் இருக்கும் இரு இடம் நம் இரு கண்கள்தான்!

நம் கண்மணியில் உள்ள ஒளியில் நிலைத்து தூங்காமல் தூங்குவதே ஞானம்!

இப்படி பொருள் கொள்வதுவே அறிவு உள்ளவர்கள் செயல்.

**"பொறிவாயில் ஐந்தவித்தான் பொய்தீர் ஒழுக்க**
**நெறி நின்றார் நீடுவாழ் வார்" - குறள்**

பொய் நீக்கி சத்தியமாக, ஒழுக்கமாக நல்ல நெறியோடு வாழ்பவர்; தன் உடலில் ஐந்து பொறிகளுக்கும் வாயிலான கண்மணியில் உள்ள ஒளியில் ஐம்பூதங்களையும் சுட்டு எரித்து வந்தாலே மரணமின்றி நீடூடி காலம் வாழலாம்.

"**அன்பின் வழியது உயிர்நிலை** அஃதிலார்க்கு
என்புதோல் போர்த்த உடம்பு" - குறள்.

எல்லா உயிர்களிடமும் அன்பு பாராட்டி வாழ்பவனே தன் உடலில் உள்ள - கண்மணியில் சிறு ஒளியாக துலங்கும் உயிரை அறிந்து உணர்வான், வாழ்வான். உடலும் அழியாது.

அன்பில்லாதவன் உடல் வெறும் எலும்பும் தோலுமான பிண்டமே.

"கண்ணிற்கு அணிகலம் கண்ணோட்டம் அஃதின்றேல்
புண்ணென்று உணரப் படும்". - குறள்

நம் கண்களின் சிறப்பு என்னவென்றால்; கண்மணி யிலுள்ள சிறு ஒளியை அறிந்து உணர்ந்து உள் ஒடி

அக்னியுடன் சேர்வதே!? இதை அறியாதவர்களுக்கு இருப்பது புண்தான்!

"தெய்வத்தான் ஆகாது எனினும் முயற்சிதன்
மெய்வருத்தக் கூலி தரும்" - குறள்.

எல்லாம் வல்லவன் என இறைவனை சொல்கிறோம்! அப்படியிருக்க தெய்வத்தால் ஆகாதது என வள்ளுவர் எதை சொல்கிறார்?!

இங்குதான் குரு உபதேசத்தின் முக்கியத்துவம் உணரலாம்!?

தெய்வம் பேரொளியானது! நம் கண். மணியில் சிறு ஒளியாக இருக்கிறது!?

நம் கண்மணியின் மத்தியில் உள்ள சிறு துவாரத்தின் உள் இந்த இறைவன் சிறு ஜோதியாக துலங்குகிறான்.

நம் கண்மணியின் மத்தியிலுள்ள அந்த சிறு துவாரம் ஒரு ஜவ்வால் அடைபட்டுள்ளது! இறைவனை மறைத்து இருக்கிறது.

ஜவ்வால் அடைபட்ட துவாரத்தை திறக்க வைக்க முயற்சிப்பதே நாம் செய்யும் தவம்!?

அந்த ஜவ்வு நீங்கி நாம் நம் உயிரான ஆத்ம ஜோதியை தரிசிக்க வேண்டும். இதுதான் நாம் செய்ய வேண்டியது.

இங்கே தெய்வம் உள்ளே உள்ளது. வாசலாகிய ஜவ்வு மறைத்துள்ளது இங்கே தெய்வத்தாலாகாது!?

குருமூலமாக தீட்சைபெற்று அந்த ஜவ்வு நீங்க தவம் செய்வதே நாம் செய்யும் முயற்சி.

நம் முயற்சி தீவிரமாக, தீவிரமாக தீ-உரமாக, தீ-உரமாக, தீ-விரைவாக பெருகி, சிறுவாசலை அடைத்து கொண்டிருக்கும் மெல்லிய ஜவ்வு உருகி கரைந்துவிடும்!?

இந்த ஜவ்வு - மறைப்புதான்; ஏழு திரைகளாக வைத்து அதன்பின் ஜோதிவைத்து வடலூரில் சத்திய ஞானசபையில் திருவருட் பிரகாச வள்ளலார் இராமலிங்க சுவாமிகளால் ஜோதி தரிசனம் காண்பிக்கப்படுகிறது.

மனிதன் தன்னுள் காண வேண்டிய உணர வேண்டிய ஆன்ம தரிசனக் காட்சியே வள்ளலார் புறத்தே காட்டி நமக்கு அறிவுறுத்தியிருக்கிறார்கள்.

வள்ளலாரின் சிறப்பு இதுதான்! எல்லா ஞானிகளும் பற்பல விதங்களிலும் பரிபாஷையாக சொல்லியிருக்கிறார்கள்.

வள்ளல் பெருமான் அகநிலையை அப்பட்டமாக அப்படியே புறத்தே காட்டி, அப்படியாவது மக்கள் உணர்ந்து மரணமிலா பெருவாழ்வு அடையட்டுமே என்ற பேராசையால் நிர்மாணித்துள்ளார்கள்.

ஜவ்வுதான் 7 திரைகள் என்று அதன் தன்மைகளை வெகு விளக்கமாக திருவருட்பா - அருட்பெருஞ்ஜோதி அகவலில் அருளியிருக்கிறார்கள்.

சைவ சித்தாந்தத்தில் பக்தியாக கூறியிருக்கிறார்கள். பதியாகிய இறைவனை பசுவாகிய ஆன்மாக்கள் அடைய தடையான பாசத்தை நீக்க வேண்டும் என்பதே.

பாசந்தான் மும்மலங்கள் - ஆணவம் கன்மம் மாயை என்பது! மும்மலங்கள் நீங்க சிவத்தை பணியவேண்டும்.

சிவம் என்றால் ஒளி!?

ஒளியை பற்றினால் மும்மலமாகிய பாசத்திரையற்று பசு பதியை அடையலாம்!

இதை மிக மிக நுணுக்கமாக அறிந்து, உணர்ந்து, நமக்கும் வழிகாட்டி, சத்தியஞான சபை அமைத்து ஜோதி தரிசனம் காட்டி உலகோர் எல்லோரும் மரணமிலா பெரு வாழ்வு பெற உருவாக்கியிருக்கிறார், அருளியிருக்கிறார்!

அருளை அள்ளி அள்ளி கொடுத்தார் வள்ளலார்! அருள் வள்ளல் வள்ளலாரே! இதையெல்லாம் உபதேசித்து தீட்சையின் மூலம் உணர்த்துவதே எமது பணி!

எல்லா மகான்களும் துணையாயிருந்து வள்ளலார் வழி நடத்த, குருவாக இருந்து அடியேன் தீட்சை கொடுப்பது இப்படியே!

நாம் எப்படி முயற்சி செய்ய வேண்டும் - தவம் செய்ய வேண்டும் என உபதேசித்து உணர்வு கொடுப்பதே தீட்சை.

தீட்சையின் மூலம் பெற்ற உணர்வால் தவமுயற்சி மேற்கொள்ள மேற்கொள்ள நம் மெய்யாகிய உடல் வருத்த தவம் செய்து, மெய்யிலுள்ள மெய்ப்பொருளாகிய கண்மணியில் உள்ள ஒளியை உணர்ந்து அவ்வொளியை பெருக்க முயற்சிப்பதே நம் முயற்சி.

இப்படி நாம் முயற்சி செய்தோமானால், நம் மெய் வருந்த முயற்சித்தோமானால் உள்ளிருக்கும் தெய்வம் வெளிப்படும்.

அதன்பின் எல்லாம் அவனே! அவனே நம்மை நடத்துவான்.

அவன் வெளிப்பட முயற்சிப்பதே தவம்! இந்த உலகில் நமது முயற்சி இது ஒன்றாகத்தான் இருக்க வேண்டும். இருந்தால்தான் காணலாம், அடையலாம் இறைவனை!?

இதைத்தான் வள்ளல் பெருமான் ஞானசரியையில் கூறியிருக்கிறார் நம் முயற்சி எப்படி அமைய வேண்டும் என கூறுகிறார்.

நினைந்துநினைந் துணர்ந்துணர்ந்து நெகிழ்ந்துநெகிழ்ந்
தன்பே
நிறைந்து நிறைந் தூற்றெழுங்கண் ணீரதனால் உடம்பு
நனைந்துநனைந் தருளமுதே நன்னிதியே ஞான
நடத்தரசே என்னுரிமை நாயகனே என்று
வனைந்துவனைந் தேத்துதும்நாம் வம்மின்உல கியலீர்
மரணமிலாப் பெருவாழ்வில் வாழ்ந்திடலாம் கண்டீர்
புனைந்துரையேன் பொய்புகலேன் சத்தியஞ்சொல்கின்றேன்
பொற்சபையில் சிற்சபையில் புகுந்தருணம் இதுவே.

இவ்விதம் நம் முயற்சி தொடருமானால் மரணமிலா பெருவாழ்வு பெறலாம்.

தீட்சை - தீக்கை என்றும் கூறுவர். அட்சத்தில் உள்ள தீயை உணர்த்துதல் தீட்சை! அட்சம் என்றால் கண்!

தீ உள்ள கையில் - கண்ணில் உணர்வு கொடுப்பதுதான் தீக்கை!

சீடன் கண்மணியில் உள்ள தீயை, குரு தன் கண்மணி ஒளியால் தூண்டுவதே தீட்சையாகும்!

தொடாமல் தொடுவது!
உணர்வால் உணர வைப்பது!
கண்மணியில் உணர்வை கொடுப்பது!
தீட்சை பெறுவதுதான் மறுபிறப்பு!

தீட்சை பெற்று பிரம்மமாகிய பரம்பொருளை பெருஞ் ஜோதியை எண்ணி எண்ணி அதிலேயே லயித்திருப்பவனே - அதை சார்ந்திருப்பவனே பிராமணன்!

பிரம்மச்சாரி என்பவனும் இவனே! கல்யாணம் செய்யாமல் இருப்பவன் பிரம்மச்சாரி இல்லை!

"இல்லறமல்லது நல்லறமன்று"

திருமண வாழ்க்கை வேண்டாம் என்று, விரும்பி துறவற வாழ்க்கை மேற்கொண்ட ஒளவையார் சொல்வதுதான்! "இல்லறமல்லது நல்லறமன்று"

ஒளவையார் கூறிய இல்லறம் எது தெரியுமா? இல் - என்றால் இல்லம். நமது இல்லம் நமது உடல்தானே!

நமது இல் ஆகிய உடலில் குடிகொண்டிருக்கும் இறைவனோடு - உடலில் கண்மணியில் ஒளியில் நல்ல நெறியோடு அறத்துடன் வாழ்வதுதான் நல்லறம்!

ஆத்மாக்கள் அனைவரும் பெண். பரமாத்மா மட்டுமே புருஷன். ஆத்மாக்களாகிய நாம் புருஷோத்தமனான பரமாத்மாவோடு கூடுவதே இல்அறம் என சிறந்த இல்லறம் என ஞானிகள் கூறுகின்றனர்.

ஜீவன் பிரம்மத்தோடு ஐக்கியமாவதே ஜீவ பிரம்ம ஐக்கிய வேதாந்தம் உரைக்கிறது.

ஜீவன் இருக்குமிடம் - கண்மணி ஒளியாக! கண் ஒளியை பெருக்கி நாம் பக்குவமாகிய பின்னரே; அதாவது

பெண் ஆகிய நாம் பூப்பெய்திய பின்னரே பூ - கண்மலர், எய்துவது அடைவது பரமான்மாவை! பூப்பெய்திய பின்தானே கல்யாணம்!?

எல்லாமே ஞானந்தான்!

நம் நாட்டில் சொல்வது அனைத்தும் ஞானமே! அதனால் தான் இது ஞான பூமி என்கிறோம்!

பெண் ஆகிய ஆன்மா ஆகிய நாம் பக்குவம் பெறுவதே - கண் திறப்பதே - தீட்சையின் பலன்!?

சூட்சும சரீரமே ஆன்மசரீரம்; ஆன்ம சரீரம் பிறப்பது தீட்சையினால்தான்!

முதலில் பிறக்கணும்! பின்னர் பக்குவமாகணும்! பின்னரே கல்யாணம்!

வாருங்கள்! தீட்சையின் மூலம் மீண்டும் பிறக்க!

காத்திருக்கிறோம்! கடவுள் பணிசெய்ய! தீட்சை பெற்றவனே முழுமையான மனிதன்! பிறப்பின் நோக்கம் பூர்த்தியாக ஒரேவழி தீட்சை பெறுதலே!

"கையறவிலாத நடுகண் புருவ பூட்டு கண்டு களி கொண்டு திறந்துண்டு நடுநாட்ட"

**வாரீர்! வாரீர்! வாழலாம்!**

* * *



**சுயம்புகேசவன் - இந்திராபாய்**

கன்னியாகுமரி

# அ சனாதன தர்மம்

இந்நூலில் இதுவரை உரைத்ததுதான் சனாதன தர்மம்!

மரணமிலா பெருவாழ்வு பெற வழிகாட்டுவதே சனாதன தர்மம்!

ஒவ்வொரு ஆத்மாவும் தன்னை உணர்ந்து மேன்மையடைய வழிகாட்டுவதே சனாதன தர்மம்!

இந்த உலகிலுள்ள 700 கோடி மக்களுக்கும் பொதுவான வாழ்க்கை நெறியே சனாதன தர்மம்!

எவ்வித பாகுபாடுமின்றி எல்லோரும் எல்லாம் வல்ல அந்த பரமாத்மாவின் பிள்ளைகளே - அம்சமே என உரைப்பதே சனாதன தர்மம்!

இதுவரை உலகில் தோன்றிய ஞானிகள் உரைத்தது சனாதன தர்மத்தையே!

உலகமனைத்தும் ஒரு குடையின் கீழ்வரும் என கன்னியாகுமரி மாவட்டம் - சுவாமிதோப்பு ஞானி முத்துக்குட்டி சுவாமிகள் கூறியது சனாதன தர்மம் உலகில் விளங்கும் காலமே!

பக்தியோகம் கர்மயோகம் ராஜயோகம் எல்லாம் ஒரு மனிதன் ஞானம்பெற வழிகாட்டும் படி நிலைகளே. ஞானம் வர - பெற சனாதன தர்மம் அறிவதே ஒரே வழி!

சமத்துவம் - சோசலிசம் - எல்லாரும் எல்லாமும் பெற்று நிறைவுடன் வாழ மகிழ்வுடன் வாழ வழிகாட்டுவது சனாதனதர்மமே!

ஒன்றே குலம் - ஒருவனே தேவன் என்பதே சனாதன தர்மம்!

"யாதும் ஊரே யாவரும் கேளிர்
தீதும் நன்றும் பிறர்தர வாரா"

என்றுரைப்பதே சனாதன தர்மம்!

திருவருட் பிரகாச வள்ளலார் இராமலிங்க சுவாமிகள் உரைத்த சன்மார்க்கம்தான் சனாதன தர்மம்!

நமக்குள் ஆயிரம் பேதங்கள் இருந்தாலும் நாமெல்லாம் மனிதன் என்று, ஆத்மா என்று ஒன்றுபட்டு வாழ உணர்த்தே சனாதன தர்மம்!

பிறந்தது எப்படி எனவும், இறப்பது எப்படி என்வும், இறவாமல் இருக்க - இறையோடு கலக்க வழிகாட்டுவது சனாதன தர்மம்!

இறைவனை வெளியே தேடாமல் நம்முள்ளே காண வழிகாட்டுவதே சனாதன தர்மம்!

அண்டத்தில் உள்ளதனைத்தையும் பிண்டத்தில் காண வைப்பதே சனாதன தர்மம்!

நாம் யார் என்பதை அறியவும், உணரவும், வாழ்வாங்கு வாழவும் வழிகாட்டுவதே சனாதன தர்மம்!

"ஜீவ காருண்யமே மோட்ச வீட்டின் திறவுகோல்" என்பதை உணர்ந்து உய்ய வழிகாட்டுவதே சனாதன தர்மம்!

"எவ்வுயிரும் தம்முயிர்போல் எண்ணி ஒத்து உரிமையுடன் வாழ" வழிகாட்டுவதே சனாதன தர்மம்!

"மதம் எதுவானாலும் மனிதன் நல்லவனாகணும்" என மகான் நாராயணகுரு கேரளா வர்க்கலையிலிருந்து உரைத்தது நடக்க வழிகாட்டுவது சனாதன தர்மம்!

அன்பே கடவுள் என புத்தர் கூறியதும், உன் அயலானையும் உன்னைப்போல் நேசி என இயேசு கூறியதும் சனாதன தர்மமே!

அநீதியை போக்க சத்திய நெறியை எடுத்துரைப்பதே ஜகொத் என நபிகள் நாயகம் கூறியதுதான் சனாதன தர்மம்.

சனாதன தர்மத்தைத்தான் எல்லா ஞானிகளும் கூறியிருக்கிறார்களே தவிர வேறு ஒன்றுமில்லை!

ஆந்திர மாநிலம் புட்டபர்த்தியிலிருந்து உலகை காத்தருளும் பகவான் சத்திய சாயி பாபா உரைப்பது சனாதன தர்மமே!

கேரள மாநிலம் வள்ளிக்காவிலிருந்து உலகை இரட்சிக்கும் அம்மா அமிர்தானந்தமயி பகர்வது சனாதன தர்மமே!

கர்நாடக மாநிலத்திலிருந்து கோயமுத்தூர் வந்து உலகை சுபிட்சமாக்க வழிகாட்டும் ஜக்கி வாசுதேவ் சற்குரு காட்டுவதும் சனாதனதர்மமே!

இவ்வுலகில் தொன்று தொட்டு, வாழையடி வாழையென வந்த திருக்கூட்ட மரபினில் 1823 அக்டோபர் 5-ம் தேதி வந்தவர்தான் திருவருட்பிரகாச வள்ளலார் இராமலிங்க சுவாமிகள்.

"பன்னெறி சமயங்கள் மதங்கள் என்றிடுமோர்
பவநெறி இதுவரை பரவிய திதனால்
சென்னெறி அறிந்திலர் இறந்திறந் துலகோர்
செறியிருள் அடைந்தனர் ஆதலின் இனிநீ
புன்னெறி தவிர்த்தொரு பொதுநெறி யெனும்
வான்புத்தமு தருள்கின்ற சுத்த சன்மார்க்க
நன்னெறி செலுத்துக என்ற என்னரசே
தனிநடராச என் சற்குரு மணியே"

**- திருவருட்பா**

பற்பல சமய மத நெறிகள் உலகில் தோன்றியதால் சனாதன தர்மமாகிய சென்னெறியை மக்கள் உணராமல் இறந்து இறந்து இருள் நிலையடைந்தனர்!

இத்திய வழியிலிருந்து மக்களை காக்க இறைவனால் அருள் பெற்று வந்தவர்தான் திருவருட்பிரகாச வள்ளலார் இராமலிங்க சுவாமிகள்!

சுத்த சன்மார்க்கமாகிய நன்னெறியை - வான் புத்தமுது அருள்கின்ற பொது நெறியாகிய சனாதன தர்மத்தை உலகோர்க்கு எடுத்துரை என இறைவனால் வருவிக்கப் பட்டவரே வள்ளலார்!

1823-10-5-ல் தோன்றிய வள்ளல் பெருமான் 1874-1-30-ல் ஒளியுடல் பெற்று உலகெங்கும் நிறைந்தார்.

அண்ட பகிரண்டமெங்கும் நிறைந்த எல்லாம் வல்ல இறை நிலை பெற்றார்.

"உலகமெலாம் போற்ற ஒளிவடி வனாகி
இலக அருள் செய்தான் இசைந்தே - திலகன் என
நானே சன்மார்க்கம் நடத்துகின்றேன் நம்பெருமான்
தானே எனக்குத் தனித்து"

- திருவருட்பா

எல்லாம் வல்ல நம்பெருமான் உலகமெலாம் போற்ற என்னை ஒளிவடிவனாக்கி அருள் பாலித்தார். சனாதன தர்மமாகிய சன்மார்க்கத்தை நானே நடத்துகின்றேன் இறைவன் அருளால் என வள்ளல் பெருமான் உரைக்கின்றார்!

வள்ளல் பெருமான் நமக்கு அருளிய திருவருட்பாவில் இறைவனை எப்படி பிரார்த்திக்க வேண்டுமெனவும் அறிவுறுத்துகிறார்.

## சத்திய விண்ணப்பம்

"சர்வ வல்லபராகிய தனித்தலைமைக் கடவுளே! தேவரீர் அற்புதத் திருவருள் விளக்கத்தால் எங்களையும் இவ்வுலகில் இத்தேகத்தைப் பெற்ற மற்றவர்களையும் உண்மை அடியவர்க ளாக்கி உண்மை அறிவை விளக்கி உண்மை இன்பத்தை அளித்துச் சமரச சுத்த சன்மார்க்க நிலையில் வைத்துச் சத்திய வாழ்வை அடைவித்து எல்லோரையும் நித்தியர்களாக்கி வாழ்வித்தல் வேண்டும்.

இது தொடங்கி எக்காலத்தும் சுத்த சன்மார்க்கத்தின் முக்கிய தடைகளாகிய சமயங்கள் மதங்கள் மார்க்கங்கள் என்பவற்றின் ஆசார சங்கற்ப விகற்பங்களும், வருணம் ஆசிரமம் முதலிய உலகாச்சார சங்கற்ப விகற்பங்களும் எங்கள் மனதில் பற்றாத வண்ணம் அருள் செய்தல் வேண்டும்.

சுத்த சன்மார்க்கத்தின் முக்கிய லட்சியமாகிய ஆன்மநேய ஒருமைப்பாட்டு உரிமை எங்களுக்குள் எக்காலத்தும் எவ்விடத்தும் எவ்விதத்தும் எவ்வளவும் விலகாமல் நிறைந்து விளங்கச் செய்வித்தருளல் வேண்டும்.

எல்லாமாகிய தனிப்பெருந்தலைமை அருட்பெருஞ்ஜோதி ஆண்டவரே தேவரீர் திருவருட்பெருங்கருணைக்கு வந்தனம் வந்தனம்".

- **திருவருட்பா**

எல்லா மதத்தவர்களாலும் ஒப்புக்கொள்ளப்பட்ட பேரொளியான இறைவனை சுட்டும் மந்திரம்!

"அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி
தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்ஜோதி"

வள்ளல் பெருமான் அருளிய மகாமந்திரம் இதுவே!

மேலும், இறைவனிடம் வேண்டும்போது

"எல்லா உயிர்களும் இன்புற்று வாழ்க!"

"கொல்லா விரதம் குவலயமெல்லாம் ஓங்குக!"

என்பதே சனாதனதர்ம பிரார்த்தனையாகும்.

ஒப்புயர்வற்ற சனாதன தர்மமே வள்ளல் பெருமானால் வலியுறுத்தப்பட்ட சமரச சுத்த சன்மார்க்க சத்திய நெறியாகும்!

இதுவல்லவோ நாம் கடைபிடிக்க வேண்டிய ஒப்பற்ற நெறி! இதை அறிவதல்லவோ அறிவுடமை! இதை உணர்வதல்லவோ நாம் ஒளிபெறும் வழி!

ஒளி ஒன்றே எங்கும் நிறைந்தது!
ஒளி பெற அறி சனாதன தர்மம்!

## மரணமிலா பெருவாழ்வு!

எல்லாம் வல்ல இறைவன், எங்கும் நிறைந்த இறைவன், பேரொளியான இறைவன் நம் உடலில் கண்மணியின் மத்தியில் உள்ள ஊசிமுனையளவு துவாரத்தின் உள் ஊசிமுனை அளவு நெருப்பாக இருக்கிறான்!!

நம் உடம்பில் உட்புகு வாசலாகிய இரு கண்மணியில் ஞான குருவால் தீட்சை பெற்று கண்மணியில் உணர்வு பெற்று அதை நினைந்து நினைந்து உணர்ந்து உணர்ந்து தியானம் செய்ய வேண்டும்!!

தொடர்ந்து முயற்சி செய்யச் செய்ய நெகிழ்ச்சி ஏற்பட்டு கண்களில் நீர் ஆறாக பெருகி பாயும். இப்படியே சாதனை தொடர வேண்டும்!!

அப்போது கண்மணியின் உள் உள்ள சிறுஜோதி கொஞ்சங் கொஞ்சமாக பெருகும்! கண்மணியின் சுழற்சி கூடுவதால் இது நடக்கும்!!

மனம் அங்கே நிற்பதால் இது கைக்கூடும்!!

இருகண்மணி வழி பெருகும் ஜோதி உள்புகுந்து சேர்ந்து அக்னி கலையுடன் போய் சேரும், அந்த இடம் நம் தலை உச்சிக்கு கீழ், வாய் அண்ணாக்குக்கு மேல் உள்ள இடமே!!

"விண்ணின் றிழிந்து வினைக்கீடாய் மெய்கொண்டு
தண்ணின்ற தாளைத் தலைக்காவல் முன்வைத்து
உண்ணின் றுருக்கியொ ரொப்பிலா ஆனந்தக்
கண்ணின்று காட்டி களிம்பறுத் தானே"

- திருமந்திரம்

இந்தநூல் முழுவதும் சொல்லப்பட்டவை அனைத்தும் இந்த ஒரு பாடலில் அடங்கும்! சனாதன தர்மத்திற்கு விளக்கம் இந்த ஒரு பாடலே போதும்!!

நம் கண்மணியில், வலது கண் சூரியன், இடதுகண் சந்திரன் ஆகிய இரு கண்மணிகளிலும் தியானம் செய்வதால் பெருகும் ஒளி உட்புகுந்து அக்னி கலையில் சேரும் - அதுவே முச்சுடரும் ஒன்றான நிலை! ஜோதி பாதம்! திருவடி!!

இந்நிலைபெறும் முயற்சியிலிருக்கும் சாதகனுக்கு படிப்படியாக உச்சியிலிருந்து உள்ளங்கால்வரை உள்ள 72000 நாடி நரம்பிலும் கொஞ்சங் கொஞ்சமாக ஒளி பரவும்!!

உடல் தூய்மையடையும்! நோய்நொடி வராது! உடல் உறுதி பெறும்! உள்ளம் பண்படும்! இறையருள் கிட்டும்! எல்லா ஞானிகளின் ஆசீர்வாதமும் பெறுவான்!!

ஜோதி தரிசனம் கிட்டும்!

திரைகள் விலகும் ஆன்மா பிரகாசிக்கும்! அங்கிருந்து ஜோதி ஊர்த்துவமுகமாக மேல் எழுந்து உச்சியை - சகஸ்ராரத்தை அடையும்!

உச்சியை அடைந்தால் அறிவுப் பிரகாசம்! பரவெளி காணலாம்! வெட்டவெளியில் உலவலாம்! பேரின்பம்! பேரின்பம்! பேரின்பமே!

இதுதான் சனாதன தர்மம் உரைக்கிறது!

எல்லோருக்கும் பொதுவான நெறிஇதுவே!
வாருங்கள் உலகோரே!
வாழுங்கள் ஒளி நெறியில்!
வாழ்வாங்கு வாழலாம்!

இந்திய மக்கள் தொன்றுதொட்டே சனாதனதர்மத்தை பின்பற்றி வாழ்கிறவர்கள் தான்!

கன்னியாகுமரி முதல் காஷ்மீர் வரை மும்பை முதல் கொல்கத்தா வரை விரிந்து பரந்த இந்திய தீபகற்பத்திலே விளங்குவது சனாதன தர்மமே!

எத்தனையோ மொழி பேசும் மக்கள்! எத்தனையோ விதம் விதமாக உடை பழக்க வழக்கங்கள் கொண்ட மக்கள் வாழும் புண்ணிய பூமி இது!

இங்கே தோன்றிய புத்தரை பின்பற்றுபவர்களே இன்றைய உலக மக்கள் தொகையில் 3ல் 1 பங்கு ஆகும்! அன்பை போதித்த புத்தர் வாழ்ந்தது இந்த சனாதனதர்மம் விளங்கும் பூமியிலே!

புத்தமதம் ஜைனமதம் பார்ஸிமதம் சீக்கியமதம் எல்லாம் சனாதனதர்ம பூமியாம் இந்தியாவில் தோன்றியவையே!

கொல்லன் தெருவில் ஊசி விற்ற கதையாக எந்த ஒரு மதமும் இந்தியாவில் பரிமளிக்க முடியவில்லை!

எல்லா மதத்திற்கும் அப்பாற்பட்ட உன்னதமான "சனாதனதர்மம்" இங்கே தழைத்தோங்குவதால் மதங்கள் இங்கு வளரவில்லை! வளரவும் முடியாது!!

இறைவனை அடைந்த ஞானிகளால் இறைவனை அடைய வழிகாட்டப் பட்ட வாழ்க்கை நெறியாக சனாதன தர்மம் விளங்குவதே காரணம்!

இதனை புரியாதவர்கள்தான் மதவாதிகள் ஜாதியவாதிகள்! அறிவிலிகள்!

மாதா பிதா குரு தெய்வம் என்றனர். மாதா இறைவனை அடைய தடையானால் தவறு செய்வாளேயானால் மாதாவை புறக்கணித்துவிடு என்பதே "சனாதன தர்மம்!"

இராமாயணத்தில் பரதன் தன் தாயை புறக்கணித்ததும், பரசுராமர் தன் தாய் ரேணுகா தேவியை கொன்றதும் "சனாதன தர்மமே".

பிதா இறைவனை அடைய தடையானால் பிதாவை புறக்கணித்துவிடு என்பது "சனாதனதர்மமே!"

பிரகலாதன் தன் தந்தை இரணியனை புறக்கணித்ததும் "சனாதனதர்ம நெறியே!"

குரு இறைவனை அடைய தடையானால் குருவையும் புறக்கணித்துவிடு என்பதும் "சனாதனதர்மமே."

மகாபலி சக்கரவர்த்தி இறைவனை அடைய தடையான தன் குரு சுக்கிராச்சாரியாரை புறக்கணித்ததும் இந்த "சனாதன தர்மமே!"

தாயிற் சிறந்த கோவிலுமில்லை
தந்தை சொல்மிக்க மந்திரமில்லை
குருவே சாட்சாத் பரப்பிரம்மம்

என்றெல்லாம் சொன்ன நம் முன்னோரே இறைவனை அடைய யார் தடையானாலும் தாயோ, தந்தையோ, குருவோ யாராயினும் உலகமே எதிர்த்தாலும் அவர்களை புறந்தள்ளிவிடு!? இறைவனை அடைவது ஒன்றே இலட்சியமாக கொள் என்றனர்! இதுவே சனாதன தர்மம்!

இந்திய மக்களின் கலாச்சாரம் பண்பாடு வாழ்க்கை "சனாதன தர்மமே!" இந்திய மக்களின் இரத்தத்திலே ஊறியது இந்த சனாதன தர்மமே!

எல்லோரையும் எற்றுக்கொள்ளும் பக்குவம் பரந்த மனப்பான்மை இங்கேதான் உள்ளது. வந்தோரை வாழ வைக்கும் விருந்தோம்பல் பண்பு இங்கே தான் உள்ளது.

நல்லது எங்கிருந்தாலும் எற்றுக்கொள்ளும் புத்திசாலித் தனம் இந்தியமக்களிடம் உள்ளது. ஜாதி மத இன மொழி வேறுபாடின்றி இந்திய மக்கள் அனைவரும் ஒன்று பட்டு வாழ்கின்றனர். காரணம் சனாதனதர்மமே சமத்துவம் சோசலிசம் சன்மார்க்கம் உரைத்து, வாழ்ந்து, வாழ வழிகாட்டிய ஞானிகள் பலர் வாழ்ந்தது இங்குதானே! **“ஒன்றே குலம்! ஒருவனே தேவன்!”**

**“எல்லாவுயிர்களும் இன்புற்று வாழ்க!”** இதைவிட சிறந்த கொள்கை உலகில் உண்டா?!

90 சதவீத சனாதனதர்மம் வழி நடக்கும் மக்கள் வாழும் இந்திய நாட்டில் தான் ஒரு முஸ்லீம் ஜனாதிபதியாக முடிகிறது! ஒரு சீக்கியர் பிரதமர் ஆக முடிகிறது!

இந்திய அரசாங்கத்தின் உயர் பதவிகளில் எல்லோரையும் ஏற்றி வைத்து அழகு பார்ப்பதுதான் சனாதன தர்ம நெறிப்படி வாழும் இந்திய மக்களின் பண்பாடு!

உலகிலேயே இந்தியா ஒப்பற்ற உன்னதமான ஒரு நாடாக விளங்கக் காரணமே இந்த கலாச்சாரம் தான்! இந்த சனாதனதர்ம நெறிதான்!

“இந்தியன்” என்பதில் நாம் மிக மிகப் பெருமை கொள்ளலாம்!

உலகிலேயே சிறந்தவன் "இந்தியனே!"

சனாதன தர்ம நெறிப்படி வாழ்ந்த ஒரு ஒப்பற்ற மாமனிதன் சதாவதானி செய்குத்தம்பி பாவலர் அவர்கள்.

கன்னியாகுமரி மாவட்டம் நாகர்கோவில் - இடலாக் குடியில் வாழ்ந்த பெரியவர் சதாவதானி செய்குத்தம்பி பாவலர் அவர்கள்.

பிறப்பால் இஸ்லாம் மதத்தவராயினும் இந்திய மண்ணில் பிறந்த பலன் - சனாதன தர்ம நெறியை கற்றுணர்ந்தார். சதாவதானம் செய்து எல்லோராலும் சதாவதானி என போற்றப்பட்டார்.

அக்காலத்தில் தமிழகத்தில் உள்ள ஒரு சில சைவ மடாதிபதிகள் - மடஅதிபதிகளாயிருந்ததால் ஒப்பற்ற ஞானி திருவருட் பிரகாசவள்ளலார் இராமலிங்க சுவாமிகளை தூற்றியும் அவரின் திருவருட்பாவை இகழ்ந்தும் பேசி வந்தனர்.

திருவருட்பாவை படித்து அதன் அருமை பெருமைகளை உணர்ந்த சதாவதானி செய்குத்தம்பி பாவலர் அவர்கள், தான் ஒரு முஸ்லீம் என்று நினைக்காமல், இறைவனை பற்றி மட்டுமே அறியும் உணரும் நிலையிலிருந்தவர் ஆதலால் திருவருட்பிரகாச வள்ளலார் இராமலிங்க சுவாமிகள் இயற்றிய திருவருட்பா பாடல் முழுவதும் தெய்வத்தின் அருளால் பாடப்பட்ட தீந்தமிழ் தெய்வப் பாக்கள் என ஊர்தோறும் மேடைதோறும் பேசி தமிழ்நாட்டிலுள்ள சைவர்களுக்கு சரியான பாடம் புகட்டினார்.

ஒரு முஸ்லீம் பெரியவர் திருவருட்பிரகாச வள்ளலார் இராமலிங்க சுவாமிகளின் மகத்துவத்தை உணர்ந்தது போல் இங்குள்ள மட அதிபதிகள் உணரவில்லை என்பது வெட்கக் கேடான விஷயம்!

சனாதன தர்ம நெறிப்படி வாழ்ந்த ஒரு மாமனிதன் சதாவதானி செய்குத்தம்பி பாவலர் அவர்கள்.

இந்த இந்திய புண்ணிய பூமியில் ஞான ஆரண்யமாம் தமிழகத்தில் சதாவதானி பிறந்த நாகர்கோவிலில் நானும் பிறந்தேனே என எண்ணி நான் மிகவும் பெருமைப்படுகிறேன்!

அன்றும் இன்றும் என்றும் இந்தியாவில் நிலவியது, நிலவுவது சனாதன தர்மமே!

வருங்காலம் சனாதனதர்ம நெறிப்படி வாழ்பவர்களுக்குத் தான்!

**"உலகோரே மனந்திரும்புங்கள்!"** புறத்தே அலையும் மனதை அகத்தே இறைவன் திருவடியில் திருப்பி விடுங்கள்!

**"பரலோக சாம்ராஜ்ஜியம் சமீபத்திலிருக்கிறது!"**
**பரம்பொருள் அருள்பெற முயல்க! வாழ்க!**

**அன்பு என்னும் ஆயுதமும்!**

**அறிவு என்னும் கேடயமும்!!**


**கொண்டு உலகை வெல்ல வாரீர்!**

**அறிவிலிகளாய் இருந்து அழிந்தது போதும்!**

**"ஆன்ம நேய ஒருமைப்பாடு" கொண்டு வாழ்வோம்!**

**உலகில் நாம் பிறந்தது வாழ்வதற்கே!**

**வருக! உணர்க!! வாழ்க!!!**



**சதீஷ்　　　ராதா　　　சிவ செல்வராஜ்**

※ ※ ※

பாரதியின் 'ஆப்செட்' பிரிண்டர்ஸ், நாகர்கோவில் ☎ : 233853



வாலை



ஞானபண்டிதன்



ஆதிகுரு



ஆபத்பாந்தவன்



சற்குரு


**சனாதன தர்ம நெறிப்படி வாழ**

**ஞானம் பெற விழிவழியே தீட்சை வழங்கும்**

**ஞானசற்குரு - ஸ்ரீலஸ்ரீ சிவசெல்வராஜ்**

**பூவுடல் எடுத்த 50 ஆண்டுகள் "பொன்விழா"**

**திருவடியை சரணாகி 25 ஆண்டுகள் "வெள்ளிவிழா"**



பூரணமாய்ப் பூத்தெழுந்த புண்ணியமெய் மாமலரின் புகழ்விளங்க வந்த அம்மானே,
புருவநடுப் பொட்டினிடைப் புத்தமுதப் புனல்பெருகப் புதையலான ஞான மெய்மையே
மரணத்தை வெல்லுகின்ற மாமணியின் சாட்சிதனை மானுடர்க் களிக்க வந்தவரே
மாதவத்தி லாழ்ந்துஞான மன்றிலேறி கனிபறித்த 'மாகுரு சிவ செல்வ ராஜரே'
காரணமாய் நான்குயுகக் காரியமும் ஆற்றிடவே கருமணியுள் கனலா னவரே
கருவறையும்; கல்லறையும்; காத்தருளும் கடவுளெனக் கண்கலந்த ஞான வள்ளலே
ஆரணமாய்ச் சிரசினுள்ளில் அகரமாகி நின்றொளிரும் ஆத்துமவுணர்த்த வந்த செல்வ
அடிபிடிக்க அமரவென்ற அறிவுணர்த்தி ஞானமீயும் அற்புத மெய்ஞ்ஞான குருநாதா

நாஞ்சில் ஆப்செட், நாகர். 233853